மன்றம்

இரா. நெடுஞ்செழியன், எம்.ஏ.

3 | 1 - 4 - 55 | இதழ் 23

இடையன் வீட்டில் அரசன்



நாடு அணா 4 ★ மாதமிருமுறை ★ வெளிநாடு அணா 5

புரிந்துகொள்ளாத அறிமுகம்

தோழர் டி. சண்முகம் அவர்கள் செங்கற்பட்டு மாவட்டாண்மைக் கழகத் தலைவராக இருக்கும்போது, அறிஞர் அண்ணா அவர்கள், அவரோடு காரில், செங்கற்பட்டு மாவட்டத்தைச் சேர்ந்த சிற்றூர்ப்பகுதிக்குச் செல்லவேண்டிய வாய்ப்பு ஒன்று ஏற்பட்டது. இது நடைபெற்றது ஏறத்தாழ 1944-ஆம் ஆண்டாக இருக்கக் கூடும்.

தோழர் டி. சண்முகம் அவர்கள் காரில் சென்றுகொண்டிருக்கும்போது இடையில், ஒரு சிற்றூரில், மாவட்டாண்மைக் கழகத்தைச் சேர்ந்த துவக்கப்பள்ளி ஒன்றைக் கண்டாராம். அதனைப் பார்வையிடலாம் என்று கருதிக் காரை நிறுத்தி விட்டு, அறிஞர் அண்ணாவையும் அழைத்துக்கொண்டு பள்ளிக்கூடத்தில் நுழைந் தாராம். அந்தப் பள்ளிக்கூடத்துத் தலைமையாசிரியர் அரசியல் அறிவும் பொது அறிவும் அற்ற ஒருவராக இருந்ததால் அண்ணாவை அவரால் கண்டுகொள்ளமுடிய வில்லை. தோழர் டி. சண்முகம் தலைமையாசிரியரிடம் பள்ளிக்கூடத்து நிலைமை களைப்பற்றிச் சிறிதுநேரம் கேட்டறிந்துவிட்டு, அறிஞர் அண்ணாவைச் சுட்டிக்காட்டி "இவர் யார் தெரியுமா?" என்று தலைமையாசிரியரைக் கேட்டாராம்.

"யார் என்று தெரியவில்லையே!" என்று தயக்கத்தோடு தலைமையாசிரியர் கூறினாராம்.

"இவரைத் தெரியாது?......என்னய்யா நீ தலைமையாசிரியர்!" என்றாராம் தோழர் சண்முகம்.

"எங்கேனும் பார்த்திருப்பேன். சரியாக நினைவு இல்லை!" என்று கூறினாராம் தலைமையாசிரியர்.

"இவர் தெரியாது!...இவர்தானய்யா அண்ணாதுரை!...அண்ணாதுரை!..." என்று தோழர் டி. சண்முகம் சொல்ல, அப்பொழுதும் அண்ணாவை யாரென்று அந்தத் தலைமையாசிரியரால் புரிந்துகொள்ள முடியவில்லை.

"இவர்தானய்யா அண்ணாதுரை!......சந்திரோதயம்!......நாடகம்!......தெரி யாது?......" என்று தோழர் சண்முகம் மீண்டும் கேட்டாராம்.

"ஓகோ! நாடகக் காண்ட்ராக்ட்காரரா......" என்று இழுத்தாற்போல் கூறி னாராம் தலைமையாசிரியர்.

"இல்லையா!......சந்திரோதயம்!......துரைராஜ் வேஷம்......நடிக்கல்லே?..." என்று கேட்டாராம்.

"ஓகோ! நடிகரா?......" என்று புரிந்துகொண்டவர்போல தெளிவுபடுத்திக் கொண்டாராம் தலைமையாசிரியர்.

"என்னய்யா இது!......இவரைத் தெரியாது?...விடுதலைப் பத்திரிகை!...... எழுதுவாரு!......பேசுவாரு!......அண்ணாதுரை!......தெரியாது?........." என்று மேலும் விடாமல் வினவினாராம்.

தலைமையாசிரியர் தாம் புரிந்துகொள்ளாததை இனியும் காட்டிக்கொள்ளக் கூடாது என்று கருதி, "ஓகோ!...இப்பொழுது தெரியுது! தெரியுது! பார்த்திருக் கிறேன்!......இப்பொழுதுதான் நினைவுக்கு வருகிறது!" என்று கூறினாராம். உள்ள படியே அப்பொழுதும் அவர் புரிந்துகொள்ளவில்லையாம்.

இந்த உரையாடல்களுக்கிடையே அறிஞர் அண்ணா அவர்கள் நின்றுகொண்டு என்ன செய்வதென்று தோன்றாமல் தத்தளித்தாராம். அந்த இடத்தைவிட்டு அகன்றால் போதும் என்றாகிவிட்டதாம்!

மன்றம்

இரா. நெடுஞ்செழியன். எம். ஏ.

1 - 4 - 55 வெள்ளிக்கிழமை

தமிழ் ஆட்சிமொழி ஆகுக!

தமிழகத்தில், அதாவது சென்னை மாநிலத்தில் (பெரும்பகுதி தமிழகமாக இருப்பதால்) தமிழே ஆட்சிமொழியாக நிலவவேண்டும் என்ற அரிய கருத்தை, முன்னாள் மாவட்ட நீதிபதியும் சென்னை மேலவை உறுப்பினரும் ஆன தோழர் கசபதி அவர்கள் அடிக்கடி வற்புறுத்திவருகிறார்கள்.

தமிழராகப் பிறந்து, வளர்ந்து, வாழ்ந்து, சென்னை மேலவையிலும்—சட்ட மன்றத்திலும் உறுப்பினராய் இருந்துவரும் பலருக்கு இல்லாத தமிழ் ஆர்வமும், தமிழை ஆட்சி மொழியாக்க வேண்டும் என்ற விடாமுயற்சியும் தோழர் கசபதி அவர்களிடம் சிறந்து விளங்குவதைக் காணும்போது நாம் அவரைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிறோம்.

சென்னை அரசியலார் பாம்புக்கு வாலும், மீனுக்குத் தலையும் காட்டவேண்டிய நிலையில் இருந்துவருகிறார்கள். டில்லி ஆதிக்கம், இந்தியை ஆட்சிமொழியாக்கவேண்டும் என்று ஒருபக்கம் இருந்து வற்புறுத்துகிறது; மற்றொரு பக்கம் தமிழை ஆட்சிமொழியாக்க வேண்டும் என்று தமிழ்ப் பெருமக்கள் முழக்கமிட்டு வற்புறுத்திவருகிறார்கள். சென்னை அரசியலார் இரண்டையும் நிறைவேற்றிவைக்கமுடியாதவர்களாய், ஆனால் இரண்டிற்கும் தலையாட்டுபவர்களாய் இருந்துவருகின்றனர். தமிழகத்தில் தமிழையே எல்லாத் துறைகளிலும் ஆட்சிமொழியாக்கும் தெளிவும் துணிவும், சென்னை அரசுக்குப், போகப்போக உண்டாகும் என்பதுமட்டும் உறுதி; ஆனால் இப்பொழுதுள்ள சூழ்நிலையில் இப்பொழுதுள்ள காங்கிரசு ஆட்சியினர்க்கு அந்தத் தெளிவும் துணிவும் ஏற்படுமா என்பது ஐயப்பாடே!

இந்தியத் துணைக்கண்டத்தில், அந்தந்த வட்டாரத்திற்குரிய மொழியாக இருந்துவரும் வட்டாரமொழியே, அந்தந்த வட்டாரத்தில் ஆட்சிமொழியாக இருந்துவரவேண்டும் என்றும், அகில உலகப் பொதுமொழியாக இருக்கும் ஆங்கிலமே இந்தியத் துணைக்கண்டத்திற்குப் பொதுமொழியாகவும், துணைக்கண்ட ஆட்சிமொழியாகவும் இருக்கலாம் என்று நாம் அடிக்கடி வற்புறுத்திக் கூறிவருகிறோம். திராவிடக் கூட்டாட்சியை எடுத்துக்கொண்டாலும், தமிழகம்—ஆந்திரம்—கருநாடகம்—கேரளம் — ஆகிய நான்கு பகுதிகளிலும் முறையே தமிழ்—தெலுங்கு—கன்னடம்—மலையாளம் ஆகிய நான்கும் எல்லாத்துறைகளிலும் ஆட்சிமொழியாக விளங்கலாம் என்றும், திராவிட நாட்டின் பொதுமொழியாகவும் திராவிடக் கூட்டாட்சி மொழியாகவும் ஆங்கிலமே இருக்கலாம் என்றும் வற்புறுத்திவருகிறோம்.

இந்தியத் துணைக்கண்டத்திலுள்ள எந்தப் பகுதி மக்களும், எத்தனை இந்திய மொழிகளைக் கற்றுக்கொண்டாலும், ஆங்கிலத்தை எவரும் புறக்கணிப்பதற்கில்லை என்ற கருத்தை இந்தியாவிலுள்ள எல்லாக் கட்சிகளின் எல்லாத் தலைவர்களும் எப்பொழுதும் கூறிக்கொண்டே வருகின்றனர். உலகத் தொடர்பு கொள்ள—உலக வாணிகம்புரிய—உலக அறிவியற் கருத்துக்களை உணர ஆங்கிலத்தை ஒவ்வொருவரும் கற்றுத் தீரவேண்டியிருக்கிறது. இந்தியத் துணைக்கண்டத்திலுள்ள எல்லாப் பகுதியினரும் கற்றுத்தீரவேண்டிய நிலையிலிருக்கும் ஆங்கிலத்தையே ஏன் இந்தியத் தொடர்பு கொள்வதற்கும், திராவிடத் தொடர்பு கொள்வதற்கும் வைத்துக்கொள்ளக்கூடாது? இந்தியத் துணைக்கண்டத்தைப் பொறுத்தவரையிலும், பிறகு திராவிடத்தைப் பொறுத்தவரையிலும் தங்கள் தங்கள் வட்டார மொழி, ஆங்கிலம் ஆகிய இரண்டை மட்டுமே பெரும்பகுதி மக்கள் கற்றுக்கொண்டால் போதுமானது என்ற நிலை ஏற்பட்டுவிடும். வட்டாரமொழியாகப் பிரிக்கமுடியாத அளவுக்குத் தனித்தியங்கும் மொழியைத் தாய்மொழியாகக் கொண்டோர், தாய்மொழியைத் தவிர மேலும் இரண்டே மொழிகளை, அதாவது வட்டாரமொழி, ஆங்கிலம் ஆகிய இரண்டை மட்டுமேதான் கற்றுக்கொள்ளவேண்டிவரும்.

தமிழகத்தைப் பொறுத்தமட்டில் எடுத்துக் கொண்டால் தமிழ் மக்கள் தாய்மொழியும் வட்டாரமொழியுமான தமிழையும், உலகப்பொதுமொழியாகிய ஆங்கிலத்தையும் மட்டுமே அறிந்துகொண்டால் போதும். இந்தியையோ அல்லது சமஸ்கிருதத்தையோ கட்டாயம் அறிந்துகொள்ளவேண்டிய இன்றியமையாமை ஏதும் இல்லை. டோக்கியோவோடும், மாஸ்கோவோடும், இலண்டனோடும், நியூயார்க்கோடும்

தொடர்பு வைத்துக்கொள்வதற்காகக் கற்றுக் கொள்ளுகிற ஆங்கிலத்தையே பம்பாயோடும், கல்கத்தாவோடும், அலகாபாத்தோடும், ஆமதாபாத்தோடும், டில்லியோடும் தொடர்பு வைத்துக்கொள்ளப் பயன்படுத்திக்கொள்ளலாமே! மாசேதுங்கோடும், சர்ச்சிலோடும், அய்சனோவரோடும், புல்கனினோடும் பேசுவதற்காக வைத்திருக்கிற ஆங்கிலத்தையே நேருவோடும் பேசுவதற்கு வைத்துக்கொள்ளலாமே! **எனவே இந்தியை இந்தியத் துணைக்கண்டத்தின் ஆட்சிமொழியாகவும், பொதுமொழியாகவும் ஆக்கும் முயற்சி தேவையற்றது—வேண்டப்படாதது—நேரம், நினைப்பு, உழைப்பு, ஆற்றல், பொருள் ஆகியவற்றைப் பாழ்படுத்துவது—வெறுத்தொதுக்கவேண்டியது ஆகும்.**

நல்ல வாய்ப்பாக அகில உலகப் பொது மொழியாகிய ஆங்கிலத்தைக் கற்றுக்கொள்ளும் பயிற்சியும், பழக்கமும், பண்பும் குறிப்பாகத் தமிழகத்தில், பொதுவாகத் திராவிடத்தில் இப்பொழுதே இருந்துவருகின்றன.

இனித் தமிழைத் தமிழகத்தில் ஆட்சி மொழி ஆக்குவதில் தடை என்ன? இந்தியை இந்தியாவில் ஆட்சிமொழி ஆக்கிவிட முடியும் என்ற தெளிவும், துணிவும் இந்தியப் பேரரசினர்க்கும், சென்னை மாநில அரசினர்க்கும் இருக்குமேயானால், அதைவிட இனிதாகவும், எளிதாகவும், உயர்ந்ததாகவும், இயற்கையோடு இயைந்து வளர்ந்ததாகவும், உயர்தனிச் செம்மொழியாகவும், வேர்ச்சொற்கள் உடையதாகவும், புதிதுபுதிது சொற்களை உண்டாக்கிக் கொள்ளும் திறம்படைத்ததாகவும், சொற்செறிவு உடையதாகவும், இலக்கண வரம்பு கொண்டதாகவும், பண்டை நாட்களில் ஆட்சி மொழியாக இருந்ததாகவும் உள்ள **தமிழ்**, ஆட்சிமொழி ஆகமுடியாதா என்று குன்றின் மீது ஏறிநின்று அறைகூவல்விடக்கூட ஆயத்தமாக இருக்கிறோம்.

தமிழகத்தில் அஞ்சல் தலைகள்—அஞ்சல் அட்டைகள்—பண அஞ்சல்கள்—அஞ்சல் நிலையங்கள்—தந்திகள்—அரசாங்க அலுவலகங்கள்—வாணிகங்கள்—சட்ட மன்றங்கள்—நீதிமன்றங்கள்—ஊராட்சி, நகராட்சி, மாவட்டாட்சிக் கடிதங்கள்—பயிற்சிக்கூடங்கள்—பல்கலைக்கழகங்கள்—பொதுக்கூட்டங்கள் — மணவினைகள்—பிணவினைகள்—கோயில் வழிபாடுகள் எல்லாம் தமிழிலேயே நடைபெறலாமே! இவையெல்லாம் இந்தியால் பதினைந்து ஆண்டுகளில் முடியும் என்றால், தமிழால் அதைவிடக் குறைந்தகால அளவில் முடியுமே! ஏன் முடியாது?

திருச்சி மாவட்டத்தில், அரசாங்க அலுவல்களைத் தமிழில் நடத்தும் முயற்சி அவ்வளவு வெற்றிகரமாக இல்லை என்றால், அதற்குக் காரணம் தமிழினிடத்து ஏற்பட்ட குறைபாடு அல்லவே! அரசாங்கத்தின் அக்கரையின்மையல்லவா முழுக்க முழுக்கக் காரணம் ஆகும். இப்பொழுதுள்ள அரசாங்க அலுவலாளர்களில் பெரும்பாலோர் தமிழை ஒழுங்காகப் படித்தவர்கள் அல்லவே! ஆங்கிலம் கற்றுக் கொள்வதற்கு அவர்கள் செலுத்திய அளவுக் கவலையைத், தமிழைக் கற்றுக்கொள்வதற்கு அவர்கள் செலுத்தியதில்லையே! திருச்சி மாவட்டத்தைப் பொறுத்தவரையில், எல்லா அரசாங்க அலுவலகங்களிலும் தமிழிலேயே செயலாற்றும் ஆர்வங்கொண்ட அந்தந்தத் துறைகளிலுள்ள அலுவலாளர்கள், திருச்சி மாவட்டத்திற்கு வேண்டுமானால் மாற்றிக் கொள்ளலாம் என்ற ஒரு கட்டளையைப் பிறப்பித்து, தமிழார்வங்கொண்டோரை மட்டும் திருச்சி மாவட்டத்திற்கு அனுப்பி, ஓராண்டு காலம் வெள்ளோட்டம் ஓட்டிப் பார்க்கட்டும் சென்னை அரசியலார். பிறகு அரசாங்க அலுவல்கள் நடக்கின்றனவா இல்லையா என்று பார்ப்போம்?

ஒவ்வொரு பொருளையும் குறிக்க எத்தனையோ ஆங்கிலச் சொற்கள் இருக்கக், குறிப்பிட்ட பொருள் ஒன்றைச் சுட்டக், குறிப்பிட்ட ஆங்கிலச் சொல்லையே பயன்படுத்துவது போலக், குறிப்பிட்ட பொருளைக் குறிப்பிட்ட தமிழ்ச் சொல் ஒன்றால் சுட்டிக்காட்டப் பழகிக் கொள்ளலாமே! தேவையான தமிழ் ஆக்கச் சொற்களைக் கண்டுபிடிக்கத் தோழர்கள் ஆர். பி. சேதுப்பிள்ளை, தேவநேயப் பாவாணர், டாக்டர் அ. சிதம்பரநாதனார், இளவழகனார், டாக்டர் மா. இராசமாணிக்கனார், ஔவை சு. துரைசாமி, டாக்டர் மு. வரதராசனார், தெ. பொ. மீனாட்சிசுந்தரனார், க. அன்பழகனார், க. அப்பாதுரையார் போன்றவர்களைக் கொண்ட குழு ஒன்றினை அரசியலார் ஏற்படுத்தினால், ஓராண்டுக்காலத்திற்குள் தேவையான சொற்கள் அத்தனையையும் பெற்றுவிடலாமே! வெளிநாடுகளுக்குச் செல்லும் தூதுக்குழுவினர்க்கு என்று பாழாக்கும் பெரும்பொருளை இத்தகைய ஆக்கக்குழுவுக்குச் செலவழித்தால் நாட்டுக்கு எவ்வளவோ நன்மை ஏற்படுமே!

ஒருவர் தனிப்பட்ட முறையில் எவ்வளவு மொழிகளை வேண்டுமானாலும் கற்றுக்கொள்ளட்டும், கவலையில்லை; தமிழகத்தைப் பொறுத்தமட்டில் தமிழையும், ஆங்கிலத்தையும் கட்டாயம் பயிற்ற அரசியலார் முயலுவார்களாக!

தமிழ் ஆட்சிமொழி ஆகுக! தமிழர்கள் அனைவரும் அதற்காகப் பாடுபடுக!

கருத்துக் கதிர்

கைத்தறியாளர் கண்ணீர் துடைக்க

மார்ச் 20-ந் தேதியிலிருந்து 26-ந் தேதிவரை இடையிட்ட ஒருவாரம் கைத்தறிவாரம் கொண்டாடப்பட்டிருக்கிறது. கைத்தறிக்காக வசூலிக்கப்படும் 'செஸ்' பணத்திலிருந்து, ஒரு கோடி ரூபாய்வரை, இந்த வாரத்தைச் சிறப்பாகக் கொண்டாடுவதற்காக மத்திய அரசாங்கத்தால் ஒதுக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது. விழாவைப் பொறுத்தவரையில் மிகச் சிறப்பாகவும், விரிவான அளவிலும் கொண்டாடப்பட்டது.

கைத்தறியாளர் துயர் தீர செய்யப்படும் எந்த முயற்சியையும் திராவிட முன்னேற்றக் கழகம் வரவேற்கிறது. முன்பு, கைத்தறி ஆடைகள் விற்பனையாகாமல் பெருமளவுக்கு முடங்கிட, கைத்தறியாளர் கண்களில் நீர் தேங்கிடும் சோகநிலை வந்தபொழுது, திராவிட முன்னேற்றக்கழகம் உடனடியான—உருவான உதவியை அளிக்க முன்வந்தது. அறிஞர் அண்ணாவும், முன்னேற்றக்கழக முன்னணி வீரர்களும், கைத்தறித் துணிகளைத் தாமே எடுத்து, தெருத்தெருவாகச் சென்று விற்றனர். முன்னேற்றக்கழகத்தின் முயற்சியால், கைத்தறியாளரின்பக்கம் பொதுமக்களின் கவனம் திருப்பட்டதுடன், கைத்தறி ஆடைகளுக்கு புதியதொரு மதிப்பு ஏற்பட்டு, முடங்கிக் கிடந்த ஆடைகள் விற்கவும் வழி ஏற்பட்டது. பின்பு ஆண்டுதோறும், புத்தாடை பூணும் பொங்கல் நன்னாளை ஒட்டிக் கைத்தறிவாரம் கொண்டாடி வருகிறது.

இரண்டாண்டுகளாக, மத்திய அரசாங்கத்தின் உதவியுடன் கைத்தறி வாரம் கொண்டாடப்படுகிறது. கைத்தறியாளர்பொருட்டு மத்திய அரசாங்கமும் மாநில அரசாங்கமும் காட்டும் பரிவு உறுதியுடையதென்றால், அறிஞர் அண்ணா அவர்கள் கூறிய இரண்டு வழிகளையும் பின்பற்றலாம்.

(1) கைத்தறிக்கும், மில்களுக்கும் உற்பத்தி முறையில் இருக்கும் போட்டி ஒழிய, சில குறிப்பிட்ட வகைகளை கைத்தறிக்கு மட்டும் என ஒதுக்கவேண்டும், அந்தவகைத் துணிகளை (வேட்டி, சேலை போன்றவைகளை) மில்கள் உற்பத்தி செய்யக்கூடாது.

(2) முடங்கிக்கிடக்கும் கைத்தறித் துணிகளை உடனடியாக விலையாக்க, மத்திய அரசாங்கம் தனது இராணுவத்துக்கு கைத்தறித் துணிகளை வாங்குவதெனத் தீர்மானிக்கலாம், மாநில அரசாங்கம் தனது போலீஸ் இலாகாவுக்கு கைத்தறிகளை உபயோகிக்கும்படி உத்தரவிடலாம்.

அறிஞர் அண்ணா கொடுத்த யோசனைகள், கைத்தறியாளருக்கு உடனடியாக உதவி தருவதுடன், நீண்டகாலப் போக்கில் தகுந்த பாதுகாப்பைத் தருவதாகும். மத்திய அரசாங்கமும், மாநில அரசும் கைத்தறியாளர்பால் காட்டும் பரிவும் பாசமும் உண்மையானால், அறிஞர் அண்ணா தந்த அறிவுரைகளை மேற்கொள்ளவேண்டும். கைத்தறி விழாவில் கலந்துகொண்டு, விரிவுரையாற்றும் 'கனம்' மந்திரிகள் எந்த அளவுக்கு அண்ணா சொல்லிய அறிவுரைகளை ஏற்று, நடத்திவைக்கிறார்கள் என்று பார்க்கவேண்டும்.

தீண்டாமை ஒழிய

திட்டங்கள் மலிந்துள்ள காலமிது. எதற்கெடுத்தாலும் திட்டங்கள் தீட்டிட மத்திய அரசாங்கம் தயாராகவுள்ளது. முதல் ஐந்தாண்டுத் திட்டத்திற்குப்பின், இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் கவனிக்கப்படுகிறது. திட்டங்கள் அவசியம்; மிகத் தேவையானது. ஆனால் திட்டங்கள் ஏட்டளவில் நின்றுவிடக்கூடாது. ஆரம்பிக்கப்பட்ட குறிக்கோளைப் பூர்த்தி செய்வதாக இருக்கவேண்டும்.

மத்திய அரசாங்கம் குறித்துக்கொண்டுள்ள திட்டங்களில், தீண்டாமை ஒழிப்புக்காக இரண்டாண்டுத் திட்டமும் ஒன்று. அதற்காக சென்னை அரசாங்கம் சில அரிய யோசனைகளை

நல்கியிருக்கிறதாம். தீண்டாமையை ஒழித்து விட, அவர்கள் திட்டமிடுவது (1) தீண்டாமை ஒழிப்புக்காகப் பிரசாரகர்களை நியமிப்பது, (2) துண்டு பிரசுரங்கள் மூலம் ஜாதி இந்துக்களுக்கு நல்லுபதேசம் செய்வது. இரண்டாண்டுகள் இப்படிச் செய்வதன்மூலம் தீண்டாமை ஒழிப்புத் திட்டத்தை நிறைவேற்றிவிடலாமென்று அரசாங்கம் நினைக்கிறதுபோலும்.

ஜாதி இந்துக்களிடம் நல்லுபதேசம் புரிவதாலும், தீண்டாமையின் கொடுமையைப் பற்றி பிரச்ர்ரம் செய்வதாலும் தீண்டாமை ஒழிந்துவிடும் என்று யாரும் எதிர்பார்க்க முடியாது. எதிர்பார்த்தால், தீண்டாமைக்குச் சமூகத்திலுள்ள பிடிப்பை அவர்கள் சரியாக உணரவில்லை என்று அர்த்தம். நன்றாகத் தெரியும் என்றால் தாங்கள் செய்யும் வேலையில் பலன் இருக்காது என்பதை அவர்கள் முன்னதாக உணர்ந்திருக்க வேண்டும்.

தீண்டாமை என்பது தனியாகக் காணப்படுவது ஒன்றல்ல. சமூகத்தில் தீண்டாமை என்பது வர்ணாச்சிரமத்தின் விளைவாக ஏற்பட்டதாகும். எனவே தீண்டாமையை ஒழிப்பதென்றால் வர்ணாச்சிரமத்தை ஒழித்தால்தான் முடியும். தீண்டாமையை ஒழிக்கத் திட்டமிடுபவர்கள் வர்ணாச்சிரமத்தை எதிர்த்துப் பிரசாரம் செய்ய முன்வருவார்களா?

தீண்டாமையை நிலைநிறுத்துவதற்காக, இந்துக்களின் வேதபுராணங்கள் இருக்கின்றன. மனு மாந்தாதர் எழுதிய சாஸ்திரங்கள் இருக்கின்றன. தீண்டாமையை ஒழிப்பதென்றால், பேதங்களைக் காட்டும் வேதத்தை எதிர்க்கவேண்டும்! புராணங்களை மறுக்க வேண்டும்! மனுவின் திட்டத்தை மாற்ற வேண்டும், மாந்தாதா எழுதியதைத் திருத்த வேண்டும்! தீண்டாமையை ஒழிக்கத் திட்டமிடுபவர்கள் இவைகளுக்குத் 'தயார்தானா?

தீண்டாமை ஒழியவேண்டும். பாஷ்யம் ஐயங்காரிலிருந்து பயங்கரம் அண்ணங்காச்சாரியரர் வரை "ஆமாம்!" என்பார்கள். "மனுஸ்மிருதியில் வரும் பல சட்டங்கள் தவறானவை!" எங்கே. அவர்களைக் கேட்டுப் பாருங்கள், ஒத்துக்கொள்வார்களா என்று? நிச்சயம் மாட்டார்கள்.

தீண்டாமை ஒழியவேண்டும். ஆனால் வர்ணாச்சிரம தர்மத்தைப் பாதுகாக்கவேண்டும்! எப்படி முடியும்?

தோட்டத்தில் நாற்றம் வீசக்கூடாது. அதே சமயத்தில் மூலையில் குவிக்கப்பட்டுள்ள மலத்துக்குப் பாதுகாப்பும் தரவேண்டும். எப் முடியும்?

தீண்டாமை தனியாக உண்டானதல் வர்ணாச்சிரமத் திட்டத்தினால் உண்டான தீண்டாமையை ஒழிப்பதென்றால், வர்ண சிரமத்தை ஒழித்தால்தான் முடியும். இல் விட்டால் இரண்டாண்டல்ல, இருநூறாண்டு திட்டம்போட்டாலும், தீண்டாமையை ஒழி முடியாது. தீண்டாமையை ஒழிக்கத் திட் மிடும், மத்தியமாநில அரசாங்கங்கள்; இ கவனிக்குமா?

❖ ❖ ❖

சோதிடத்துக்கு யோகம்!

உத்திரப்பிரதேச முதன்மந்திரி சம்பூரணா தர் சோதிடத்தில் அபார நம்பிக்கையுள்ள ராம். அவருக்கு முதன்மந்திரி பதவி கிட் மென்று ஒரு ஜோஸ்யர் சொல்லியது சரியா விட்டதாம். ஏன், சம்பூரணானந்தர் அவர்கே ஒரு ஜோஸ்யராம்! பாரதவர்ஷத்தில், முத மந்திரிப் பதவிக்கு இதைவிட மேலான அ தாட்சி வேறென்ன வேண்டும்?

லக்னோ ஜோஸ்யர்கள் சங்கத்துக்குத் தலை ராக அந்த முதன்மந்திரி இருக்கிறார். அ ஜோஸ்யர்கள் சங்கத்தில் தலைமைவகித் மார்ச் 21-ந் தேதியன்று அவர் பேசியபெ ழுது, அவருடைய அரசாங்கம், ஜோஸ்யர்க சங்கத்துக்கு பணவுதவி செய்து ஊக்கமளி கும் என்று அறிவித்துள்ளார்.

ஜோஸ்யர் அங்கு முதன்மந்திரியானா எனவே ஜோஸ்யர் சங்கத்துக்கு அரசாங் மான்யம் ஒதுக்குவதில் ஆச்சரியமில்லை.

ஜோஸ்யத்தில் உண்மையான நம்பிக் இருக்குமானால் பணவுதவி மட்டுமல்ல, அ சாங்கத்துப் பதவிகளெல்லாம்ஜோஸ்யர்களா நிரப்பப்படும் தீர்மானத்தை முதன்மந்தி சம்பூரணானந்தர் நிறைவேற்றலாம். அதனா சர்க்கார் செலவு ஏராளமாகக் குறையும்.

உதாரணமாக, எலெக்ஷன் ஆபீசர்களா ஜோஸ்யர்களை நியமிக்கலாம். நாமிநேஷ பத்திரத்துடன் அபேட்சகரின் ஜாதகமொ றையும் சேர்த்து அனுப்பும்படி உத்தரவிரு கும், அல்லது நாமிநேஷன் கையெழுத்திடு நேரம் தேதி இருந்தாலும் போதும்! வந்திரு கும் ஜாதகங்களைப் பரிசீலனை செய்து, யா ஜெயிப்பார்கள் என்று எலெக்ஷன் கமிஷ ரான ஜோஸ்யர் சொல்வார்! அவ்வளவுதான்

அட்டைப்படம்

இடையன் வீட்டில் அரசன்

ஆல்ப்ரெட் இங்கிலாந்தை ஆண்ட புகழ் வாய்ந்த அரசர்களுள் ஒருவன். அவன் கி. பி. 878-ல் சிப்பென்ஹாம் என்ற இடத்தில், டேனிஷ்காரர்களோடு போரிடவேண்டிய அவசியம் ஏற்பட்டது. இந்தப் போரில் டேனிஷ்காரர்கள் வெற்றியுற்றனர்; ஆல்ப்ரெட் ஓடி மறையவேண்டியநிலை வந்தது. அவன் செடிகொடிகளும், புதரும் நிறைந்த காடொன்றில் மறைந்து திரிந்துவந்தான்.

காட்டினுள் மாட்டு இடையன் ஒருவன் மாட்டு மந்தைவைத்துவளர்த்து வீடு ஒன்று கட்டிக்கொண்டு வாழ்ந்துவந்தான். ஆல்ப்ரெட் அந்த வீட்டில் அடைக்கலம் புகுந்தான். யாரோ வழிதப்பிப்போன வழிப்போக்கன் என்று கருதி, அந்த இடையனின் மனைவி, அவனிடம் பரிவுகாட்டி, உண்டி உறையுள் வழங்கினாள். ஆல்ப்ரெட்டும் தன்னை யார் என்று அவர்களுக்குக் காட்டிக்கொள்ளாமல் அவர்களுக்குத் துணையாக சிலபல சில்லரை வேலைகளைச் செய்துவந்தான்.

ஒருநாள் இடையனும் இடைச்சியும் விறகு வெட்டுவதற்காக வெளியே கிளம்பும்போது, அடுப்பிலிருந்த ரொட்டியைப் பதம்பார்த்து இறக்குவதோடு, மேலும் சில ரொட்டிகளைச் சுட்டுவைக்கும்படி சொல்லிவிட்டுச் சென்றனர். ஆல்ப்ரெட் ஆழ்ந்த சிந்தனையில் ஆழ்ந்துவிடுவதால், அடுப்பிலிருக்கும் ரொட்டி என்ன ஆயிற்று என்று கவலைப்படாமல் குந்தியிருப்பான். சிறிதுநேரங்கழித்து, நினைவுபெற்று ரொட்டியைப் பார்ப்பான் அது காய்ந்து கருகிப் போயிருக்கும். வேறொரு ரொட்டியைத் தட்டிப்போட்டுவிட்டு, மீண்டும் சிந்தனையில் ஆழ்ந்துவிடுவான். அது கருகியதற்குப் பிறகுதான், அவனுக்கு அதுபற்றிய நினைவுவரும். இப்படியாகப் பெரும்பாலான ரொட்டிகளை அவன் கருகிய நிலையில் எடுத்து அடுக்கி வைத்திருந்தான். வெளியே சென்றவர்கள் வரட்டும் என்று, சாப்பிடுவதற்காகச் சாப்பாட்டு மேஜையில் காத்துக்கொண்டிருந்தான்.

இடைச்சி திரும்பிவந்தவுடன், ரொட்டிகள் கருகியவைகளாக அடுக்கி வைக்கப்பட்டிருப்பதைக் கண்டாள்; அவளுக்குச் சினம் பொங்கியது. ஆல்ப்ரெட்டைத் திரும்பிப்பார்த்தாள்; அவன் சாப்பாட்டுக்காகத் தயாராகக் காத்துக்கொண்டிருந்தான்; அந்தக் காட்சியைக் கண்டதும் அவளுக்கு ஆத்திரம் அதிகமாக மூண்டது. "ரொட்டியைப் பதம்பார்த்து எடுத்து வைப்பதில் சோப்பேறித்தனமாய் இருந்துவிட்டுச், சாப்பாட்டில் 'பங்குபோட்டுக்கொள்வதற்கு மட்டும் பல்லிளித்துக்கொண்டு வந்துவிடுகிறாயே, உனக்கு வெட்கமில்லை!" என்று கடிந்துகொண்டாள். ஆல்ப்ரெட் அசடுபோல் உட்கார்ந்திருப்பதைத்தவிர வேறெதுவும் சொல்லமுடியவில்லை. அவள்தான் அறிவாளா அவன் அரசன் என்று; அல்லது அவன்தான் சொல்வானா தான் அரசன் என்று! இந்தக் காட்சியைத்தான் சர் டேவிட் வில்கி என்ற ஓவிய நிபுணர் படமாகத் தீட்டிக்காட்டியுள்ளார். ●

மற்ற அபேட்சகர்கள் தள்ளப்பட்டு, ஜோஸ்யரால் பொறுக்கியெடுக்கப்பட்டவர் மட்டும் தேர்ந்தெடுக்கப்படுவார்! எலெக்ஷன்கள் வேண்டாம், செலவு மிச்சம்!

பின்பு கவர்னர்கள் ஜோஸ்ய சிகாமணிகளாக இருக்கவேண்டும். சட்டசபைக்கு (ஜோஸ்யர்கள் மூலம்) தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கும் எல்லா அங்கத்தினர்களுடைய ஜாதகங்களையும் வாங்கி கவர்னர் பரிசீலனை செய்வார்! அந்த ஜாதகங்களில், எது முதல் மந்திரி ஜாதகம்? எது நிதிமந்திரி ஜாதகம்? என்று அவர் பொறுக்கியெடுத்துவிடுவார்! "மந்திரி சபை கலகலத்தது," "கட்சிக்குள் கலாட்டா!" "நம்பிக்கையில்லாத் தீர்மானம்; முதன்மந்திரி முக்காடிட்டு, வந்த கொல்லைவழியே போய்விட்டார்!" போன்ற செய்திகள் வராது.

இதைப்போல, எந்த வேலைக்குப் போனாலும் ஜாதகங்களைப் பரிசீலனை செய்து ஆளைப் பொறுக்கியெடுக்கலாம்.

ஆஸ்பத்திரியில், ஒரு நல்ல ஜோஸ்யரை நியமித்தால் போதும்! நோயாளியின் ஜாதகத்தைப் பார்த்துவிட்டு, "இவன் இந்த நோயிலிருந்து பிழைப்பானா, மாட்டானா?" என்று அவர் சொல்லிவிடுவார். ஜாதகத்தின்படி உயிர் கெட்டியென்றால், அந்த நோயாளியைத் திருப்பியனுப்பிவிடலாம், அவன்தான் சாகப் போகிறதில்லையே, எப்படியும் நோயிலிருந்து, தப்பித்துக்கொள்வான்! ஜாதகத்தின்படி நோயாளி செத்துவிடுவான் என்று இருந்தால், நாம் என்ன மருந்துகொடுத்தாலும் அவன் சாகப்போகிறான், பின் ஏன் கஷ்டப்படவேண்டும். அவனையும் திருப்பியனுப்பிவிடலாம். இப்படியாக ஜாதகங்களை வைத்துக்கொண்டு, நோயாளிகளையெல்லாம் திருப்பிவிடலாம். பெரிய ஆஸ்பத்திரிகள் தேவையில்லை, டாக்டர்கள் தேவையில்லை, மருந்துகளும் வேண்டாம். ஒரு ஜோஸ்யர்போதும்! ●

நீர்ப்பாசனத் திட்டங்கள்

வடநாட்டோடு, தென்னாடு அதாவது திராவிடம், இணைந்திருக்கக்கூடாது என்பதல்ல, இணைந்திருக்க இயலவில்லை என்பதுதான் திராவிட முன்னேற்றக் கழகம் சுட்டிக்காட்டும் முக்கிய நோக்கமாகும்.

தென்னாட்டோடு வடநாடு இணைந்திருப்பதால், வடநாட்டுக்கு வாழ்வு பெருகுகிறது; வளம் குவிகிறது; வாணிகம் செழிக்கிறது; வருவாய் மிகுகிறது. தென்னாடு வடநாட்டோடு ஒட்டியிருப்பதால் வாழ்வு தேய்கிறது; வளம் சுரண்டப்படுகிறது; வாணிகம் பறிக்கப்படுகிறது; வருவாய் கொள்ளை அடிக்கப்படுகிறது வடநாட்டால்.

திராவிடம் வடநாட்டுத் தொடர்பினின்றும் விடுபட்டு விலகித், தனிக்கூட்டாட்சி வாழ்வு நடத்தத் தொடங்குமேயானால், அதன் நலிவு நீங்கவும், நல்வாழ்வு மலரவும் ஆன வழிவகைகள் ஏற்படும் என்பதைப், பொருளியல் புள்ளி விபரங்கள்மூலம் தெளிவாக அறியலாம்.

திராவிடம், மனிதவாழ்வுக்கு இன்றியமையாத் தேவைகளாக விளங்கும் **உண்ண உணவு—உடுக்க உடை—இருக்க இடம்—வாழ வழி—ஓய்வு நேரம்—பொழுதுபோக்குக்கான வசதிகள்** ஆகியவற்றைப் பெறவேண்டுமானால், அது இந்தியப் பேரரசின் ஆதிக்கத்தின்கீழ் இருக்கும் வரையில் அந்தத் தேவைகளை நிறைவேற்றிக் கொள்ள முடியாது; அது தனித்திராவிடமாகத் திகழும்போதுதான் இயலுவதாகும்.

தென்னாடு இந்தியப் பேரரசிடம் கொடுக்கும் வரிப்பணத்தைக் காட்டிலும், மிகக்குறைவான நன்மையைத்தான் அதனிடம் பெறுகிறது; ஆனால் வடநாடு தான் கொடுக்கும் வரிப்பணத்தைக்காட்டிலும் மிகவான நன்மையைப் பெறுகிறது. முதல் ஐந்தாண்டுத் திட்டத்தையும் பிற வளர்ச்சிக்கான திட்டங்களையும் கண்டால் இதன் உண்மை தெற்றென விளங்கும். நீர்ப்பாசனத் திட்டங்களும், நீர்ப்பாசனமும்—மின்சாரமும் கலந்த திட்டங்களும் வடநாட்டில் எவ்வளவு செலவில் நிறைவேறுகின்றன, தென்னாட்டில் எவ்வளவு செலவில் நிறைவேறுகின்றன என்பதை மேற்போக்காகப் பார்த்தாலே, மேற்கூறப்பட்ட உண்மை விளங்கும். இதற்கு முன்பு "மன்றத்"தில் வந்த புள்ளிவிபரம் சிலகாலத்திற்கு முன் எடுக்கப்பட்டதாகும். கீழே கொடுக்கப்படுவது இப்பொழுது எடுக்கப்பட்டதாகும்.

வடநாட்டில் மத்திய அரசாங்கத்தின் செலவில் நிறைவேறும் திட்டங்கள்

பக்காரா—நங்கல்	ரூ.	156·00	கோடி
கிராகுட்	,,	92·08	,,
தாமோதரப்பள்ளத்தாக்கு (முதல் கட்டம்)	,,	77·80	,,
கோசி (முதல் கட்டம்)	,,	66·00	,,
ரீகண்ட்	,,	35·00	,,
சாம்பல் (முதல் கட்டம்)	,,	33·75	,,
கொயானு (முதல் கட்டம்)	,,	33·00	,,
	,,	493·63	,,

வடநாட்டில் மத்திய அரசு மாநில அரசு ஆகியவற்றின் செலவில் நிறைவேறும் திட்டங்கள்

மயூராக்ட்சி	ரூ.	15·50	கோடி
காக்ராபார் வெயிட்	,,	6·26	,,
பட்டா பிரபா	,,	5·45	,,
கங்கப்பூர்	,,	3·34	,,
இதரப் பல்வேறு திட்டங்கள்		347·35	,,
	ரூ.	377·90	,,

தென்னாட்டில் மத்திய அரசு—மாநில அரசு ஆகியவற்றின் செலவில் நிறைவேறும் திட்டங்கள்

துங்கபத்ரா	ரூ.	49·68	கோடி
கீழ்ப்பவானி	,,	9·61	,,
மணிமுத்தாறு	,,	3·98	,,
மாலம்புழா	,,	3·80	,,
மேட்டூர்க் கால்வாய்	,,	2·45	,,
ஆரணியாறு	,,	0·95	,,
	ரூ.	70·47	,,

தென்னாட்டில் மத்திய அரசின் செலவில் முழுக்க முழுக்க நிறைவேறும் திட்ட

திரௌபதி அம்மன் கோயில்?

[இரா. நெடுஞ்செழியன்]

திரௌபதி அம்மன் கோயில் என்று அழைக்கப் படும் கோயில் தமிழ்நாட்டின் சிற்றூர்—பேரூர் பலவற்றிலும் இருக்கக் காண்கிறோம். அது பஞ்சபாண்டவர்களுக்குப் பத்தினியாக இருந் துவந்த திரௌபதியின் கோயிலாகும் என்று பொதுவாக எல்லோராலும் சொல்லப்படு கிறது.

திரௌபதி அம்மன் கோயிலில் வைத்துப் பூசாரிகள் பாரதக்கதை படிப்பதும், ஆண்டு தோறும் தீமிதிவிழா நடத்துவதும் வழக்கத் தில் இருந்துவ்ரும் பழக்கங்களாக இருக் கின்றன.

திரௌபதி தோன்றியதாகவும், வாழ்ந்த தாகவும் கருதப்படுகிற வடநாட்டில், குறிப் பாக அத்தினபுரம், துவாரகை போன்ற இடங்களில் திரௌபதிக்கு என்று தனிக் கோயில்கள் கட்டப்பட்டு, தீமிதி விழாக்கள் நடைபெறுகின்றனவா என்று கேட்டறிந்து பார்த்தால், திரௌபதிக்கு என்று தனிக் கோயில்கள் ஏதும் இருப்பதாகவோ, திரௌ பதியை ஒட்டித் தீமிதிவிழா என்று ஒன்று நடைபெறுவதாகவோ தெரியவில்லை. திரௌ பதிக்கும் தீமிதித்தலுக்கும் தொடர்புடைய நிகழ்ச்சி ஏதும் பாரதக் கதைகளில் வருகின் றதா என்றால், அதுவும் இல்லை. வடநாட்டில் இருக்கவேண்டிய—ஆனால் அங்கு இல்லாத— திரௌபதி அம்மன் கோயில் தமிழகத்தில் மட்டும் இருப்பானேன் என்பதும், திரௌ பதிக்கும் தீமிதித்தலுக்கும் கதையில் தொடர்பு ஏதும் இல்லாதபோது, தமிழ்நாட் டில் மட்டும் தீமிதித்தல் விழா நடைபெறுவா னேன் என்பதும் ஆராய்ச்சிக்கு உரியன வாகும்.

மேலும் பாரதக்கதையில் முக்கியமானவர் களாகக் கருதப்படும் பஞ்சபாண்டவர்களுக்குத் தனித்தனியாகக்கோயில்கள் இல்லாதபோது, திரௌபதிக்கு மட்டும் இருப்பானேன்? தரும னுக்கு மட்டும் எங்கோ ஓரிரு இடங்களில் கோயில் இருக்கின்றதே அல்லாமல், மற்ற நால்வரான வீமன், அர்ச்சுனன், நகுலன், சகா தேவன் ஆகியோர்க்கு ஒரு தனிக்கோயில் கூட இல்லை. தமிழகத்தில் கிருட்டினனுக்கு இருக்கும் கோயில்களைக் காட்டிலும் திரௌ பதிக்கு இருக்கும் கோயில்களின் எண்ணிக் கைதான் மிகவாகும். பஞ்சபாண்டவர்க்கும் கிருட்டினனுக்கும் இல்லாத அளவு மிக்கக் கோயில்கள் திரௌபதிக்கு இருப்பது வியப் புக்குரிய ஒன்றேயாகும்!

திரௌபதியிடம் காணப்பட்ட, போற்றுவ தற்குரிய, தனிச்சிறப்பியல்புக்காகத் 'தமிழகத் தார் அவளுக்குக் கோயில் எழுப்பிக் கும்பிட் டார்கள் என்றும் கொள்வதற்கில்லை. ஏனெ னில் திரௌபதியிடம் காணப்பட்ட சிறப்பான பண்பான "ஐவருக்குப் பத்தினியாக் இருந் தாள் ஆருவதாகிய கர்ணனையும் நினைத் தாள்" என்பது தமிழகம் ஏற்றுக்கொள்ள முடியாத ஒரு இழிபண்பாகும். ஒருவனுக்குக் காதற் பரத்தையாக ஒருத்தி 'அமையும் தன் மையையே சங்ககாலத் தமிழ்ப்புலவர்கள் வெறுத்துச் சொல்லியுள்ளார்கள் என்றால், ஒருத்தி ஐந்துபேரைக் கணவன்மார்களாக வைத்துக்கொள்ளும் தன்மையைத் தமிழர் பண்பாட்டுமுறை எங்ஙனம் ஏற்றுக்கொள் ளும். தமிழகத்தைப் பொறுத்தவரையில், சாதாரணப் பாமர மக்களும், ஒருத்தி ஒருவ னுக்குமேல் இருவரைக் கணவன்மார்களாக வைத்திருக்கிறாள் என்றால், அந்தத் தன்

யாதொன்றும் இல்லை என்பதையும், வடநாட் டில் மட்டும் ரூ. **493·63** கோடிக்குத் திட்டங்கள் நிறைவேறுகின்றன என்பதையும் கவனிக் கவும்.

மத்திய அரசும் மாநில அரசும் சேர்ந்து நிறைவேற்றும் திட்டங்களைக் கவனித்தாலும வடநாட்டில் ரூ. **377·90** கோடிக்கும், தென் னாட்டில் ரூ. **70·47** கோடிக்கும் திட்டங்கள் நிறைவேறுகின்றன. தென்னாட்டைக் காட் டிலும் ஐந்துமடங்கு மிகவான செலவில் வட நாட்டில் நிறைவேறுகின்றன.

இப்படிப்பட்ட வடநாட்டோடு திராவிடம் இணைந்திருப்பதால் திராவிடத்திற்கு என்ன பலன்?

மையை அருவருப்போடுதான் நோக்குவர். இப்படிப்பட்ட பண்பாடமைந்த தமிழர்கள் திரௌபதியை மட்டும் போற்றிக் கொண்டாடிக் கோயில்கட்டிக் கும்பிடத் தலைப்பட்டார்கள் என்பது, உண்மையியல்பு ஆராய்ச்சிக்குப் பொருந்திவருவதாக இல்லை.

மேற்கண்ட காரணங்களின் அடிப்படையில் நின்று பார்க்கும்போது, திரௌபதி அம்மன் கோயில் என்று அழைக்கப்படுவது, உண்மையிலேயே திரௌபதி அம்மன் கோயிலாக இருக்கமுடியாது என்ற நேர்மையான முடிவுக்குத்தான் வரவேண்டியவர்களாக இருக்கிறோம். உண்மையாகப் பார்க்கப்போனால், **தீபாய்ந்த அம்மன்கோயில்** என்று வழங்கிவந்த கோயில்தான் நாளடைவில் **திரௌபதி அம்மன் கோயிலாக** மாறியிருக்கின்றது என்பதைத் தெள்ளத்தெளிய உணரலாம். தீபாய்ந்த அம்மன் கோயில் வழிபாடு பெரும்பாலும் கல்வியறிவற்ற போர்வீரர்களால் மேற்கொள்ளப்பட்டு வந்ததால், **தீபாய்ந்த அம்மன்** என்பது **திரௌபதி அம்மன்** என்று மருவி வழங்கப்பட்டுவிட்டது. 'ஆமில்டன் பிரிட்ச்' என்பது 'அம்பட்டன் வாராவதி' ஆகிப், பிறகு 'பார்பர்ச் பிரிட்ச்'சாகச் சென்னையில் வழங்கத்தொடங்கியிருப்பதுபோல், 'தீபாய்ந்த அம்மன் கோயில்' என்பது 'திரௌபதி அம்மன் கோயில்' என்று மருவி, திரௌபதி அம்மன் என்ற காரணத்தால், பாரதக்கதை படிக்கவேண்டிய நிலைமைக்குக் கொண்டுவந்துவிட்டுவிட்டது.

பண்டைக்காலத்தில் கணவன் இறந்துவிட்ட காரணத்தாலோ, அல்லது தன் தாய்நாடு மாற்றான் கையில் சிக்கிய காரணத்தாலோ, அல்லது மாற்றானோடு தானும் சண்டைபோட்டு இறுதியில் தோல்வியுறும் நிலையை அடையவேண்டி ஏற்பட்ட காரணத்தாலோ பேரும் புகழும்பெற்ற ஒரு அரசியோ அல்லது மறக்குடி மகளோ தீயை வளர்த்து அந்தத் தீயில் விழுந்து தன் உயிரை மாய்த்துக்கொண்டிருக்கவேண்டும். அவள் கண்ணகி போன்ற ஒரு பெண்மணியாக இருந்திருக்கவேண்டும்; அல்லது ஒருகால் அவள் கண்ணகியாகவே இருந்தாலும் இருக்கக்கூடும். தீயில் விழுந்து, தன் உயிரை மாய்த்து, மானத்தைக் காப்பாற்றிக்கொண்ட பெயர்பெற்ற பெண்மணிக்கு எழுப்பப்பட்ட கோயில்தான் முதலில் **தீபாய்ந்த அம்மன் கோயில்** என்று வழங்கப்பட்டிருந்திருக்கவேண்டும். வீர மறக்குடி மகளிர் பலரும் ஆங்காங்கே தீயில் விழுந்து இறந்திருக்கக்கூடுமாதலால் ஆங்காங்கே தீபாய்ந்த அம்மன் கோயில்கள் எழுப்பப்பட்டிருக்கக்கூடும். காந்தியார் மண்டபங்களும், இராமகிருட்டினர் மடங்களும், சாயிபா கோயில்களும் இந்தக்காலத்தில் வழிபாட் கென்று எழுப்பப்படுவதுபோல், அந் காலத்திலும் ஒரு ஊரில் எழுப்பப்ப சிறப்புவாய்ந்த தீபாய்ந்த அம்மன் கோயி பார்த்துப், பல ஊர்களிலும், நாளடைவி தீபாய்ந்த அம்மன் கோயில்களைப் பொது கள், குறிப்பாகப் போர்வீரர்கள் எழுப்பியி கக்கூடும். ஆங்காங்கு எழுப்பப்பட்ட கண்ண கோயிலையே தீபாய்ந்த அம்மன் கோ என்று கொண்டனரோ பிற்கால மக் என்று எண்ணவும் இடமிருக்கிறது.

தீ மிதித்தல் என்ற வீரச்செயலைத் தீபாய் அம்மனோடு தொடர்புபடுத்திப் பார்ப்ப எல்லாவகையிலும் பொருந்திவரும் ஒன் யாகும். தீ மிதித்தல் திரௌபதி அம்மனே அவ்வளவாகப் பொருந்தி வருவதில்லை.

தீபாய்ந்த அம்மன் கோயில்தான், பிற் லத்தில் திரௌபதி அம்மன் கோயில மாறிற்று, என்ற கருத்தை, நல்ல ஆராய்ச் தெளிவோடு டாக்டர் மா. இராசமாணிக்க அவர்கள் எடுத்து விளக்கிக் காட்டியுள்ள கள்.

தென்னாட்டில் திரௌபதி அம்மன் கோ என்று வழங்கப்பட்டுவருவது தென்னாட்டை சேர்ந்த மறக்குடி மகளின் கோயில்தான் எ பதைத் தெளிவாக உணரலாம். இந் காரணம்பற்றிதான் வடநாட்டில் 'திரௌப அம்மன்' கோயிலும், தீ மிதித்தலும் இல் என்பதை அறிந்துகொள்ளலாம்.

பழங்கால நம்பிக்கைக் கேற்ப, அக்க மக்கள், தீபாய்ந்த அம்மன் சிலையைக் கோ விலே வைத்துக், கடவுளாகக் கருதித், மிதித்து வழிபட்டனர். இக்காலத்தில் அ னைக் கடவுளாக மதிக்கவோ, தீ மிதித்து வ படவோ தேவையில்லை; அதனைக் கண்கா சிப் பொருளாக வைத்துப் பார்த்து ம வேண்டியதுதான் பொதுமக்களின் கட யாகும்.

தீபாய்ந்த வீரமகளைப் பற்றிய வரலா தெரியவில்லை; வரலாறு சிதைந்து உருமா வேறு யாதுயாதாகவோ மாறிவிட்ட ஊருக்கு ஊர் இருக்கும் சிலைகளும் என் என்னமோ வடிவெல்லாம் பெறத்தொட விட்டன. எனவே திரௌபதி அம்மன் கோ என்பது **தீபாய்ந்த அம்மன் கோயில்தான்** என்ப யும், அந்தச் சிலை கண்காட்சிச்சாலையில் வை கப்படவேண்டிய சிலை என்பதையும் எல்லோ ரும் உய்த்துணர்வார்களாக!

இறை வாங்கும் முறை

[எழினி]

சங்ககாலத் தமிழகத்தை ஆண்டுவந்த மிகச் சிறந்த அரசர்களுள் பாண்டியன் அறிவுடைநம்பி ஒருவனாவான். பாண்டிய மண்டலம் முழுவதும் அவன் ஆளுகையின் கீழ்க் கிடந்தது. அவன் அறிவும் அழகும் ஒருங்கே வாய்க்கப்பெற்றிருந்தான். அவன் மிக்க அறிவுடையவனாக இருந்த காரணத்தால் 'அறிவுடை' என்ற அடைமொழியும், மிக்க அழகுடையவனாக இருந்த காரணத்தால் 'நம்பி' என்ற பெயரும் அவனுக்கு இட்டு வழங்கப்பட்டன. அவன் தீந்தமிழ்ச் செய்யுள் இயற்றும் புலமை மிக்கவனாகவும் திகழ்ந்தான். அவன் பாண்டிய மரபினைச் சார்ந்த அரசர் குடியில் தோன்றிய செம்மலாக இருந்த காரணத்தால், ஆண்மைத் திறத்திலும் சிறந்து விளங்கினான். இத்துணைச் சிறப்புகளோடுப் பொலிவுற்று விளங்கிய அறிவுடைநம்பியின் பெயரும் புகழும் தமிழகமெங்கணும் ஒளி வீசி நின்றன என்பதில் வியப்பொன்றுமில்லை.

அறிவுடைநம்பி கல்வி கேள்விகளில் வல்லவனாக இருந்ததால், எப்பொழுதும் தமிழ்ப் புலவர் குழாம் புடைசூழ இருப்பதைப் பெரிதும் விரும்பி வாழ்ந்துவந்தான். அறிவுடைநம்பியால் போற்றப்படக்கூடியவராகவும், அறிவுடை நம்பிக்கு அறிவுரை கூறக்கூடியவராகவும் இருந்த ஒரு சில புலவர்களிலே தலைசிறந்து விளங்கியவர் பிசிராந்தையார் ஆவார். அவர் பாண்டியநாட்டைச் சேர்ந்த பிசிர் என்ற ஊரில் வாழ்ந்த பெரும்புலவராவார். அவர் நிலபுலங்களையும், ஏவலாட்களையும் உடைய ஒரு பெரும் பண்ணையாராகவும் இருந்துவந்தார். அவர் பெரும்பாலும் பிசிர் என்ற ஊரிலேயே வாழ்ந்துவந்தார். எனினும் ஓய்வும் ஒழிவும் ஏற்படும்போது, மதுரைமாநகர் சென்று அரசனையும், ஏனைய தமிழ்ப்புலவர்களையும் கண்டு அளவளாவி வருவது வழக்கம்.

அறிவுடைநம்பி அறிவிற் சிறந்தவனாக இருந்தபோதிலும், ஒழுக்கத்தில் நெறிதவறியவனாய்க் காட்சியளித்தான். அவன் காதற் மயக்கத்திற்கு அடிமையாகும் பண்புடையவனாகத் திகழ்ந்த காரணத்தாலும், அவனது செல்வம், செல்வாக்கு, அழகு கண்டு அவனிடம் பல பெண்களும் காதல்கொண்ட காரணத்தாலும் அவனுக்குக் காதற்கிழத்திகள் பலர் நாளடைவில் ஏற்படலாயினர். அவன் அவர்கள் எல்லோரையும் தனித்தனி மாளிகையில் வைத்துக் காப்பாற்றி, அவர்களுக்குப் பெரும்பொருள் வழங்கவேண்டியிருந்ததோடு, அக்காதற்கிழத்திகளின் பெரும்பெருஞ் சுற்றத்தாரையும், அக்காதற்கிழத்திகளின் விருப்பத்திற்கிணங்க அச்சுற்றத்தார்க்கு வேண்டும் பொருள் வழங்கிக், காப்பாற்றவேண்டிய பெரும் பொறுப்புடையவனாகவும் இருந்துவந்தான். இதனால் அவனுக்குப் பெருஞ்செலவு ஏற்பட்டது. அவனது செல்வமெல்லாம் நாளுக்குநாள் கரைந்தது. அடிமையரசர்கள் செலுத்தும் கப்பமும், குடிமக்கள் செலுத்தும் வரிப்பணமும் அரசனது விரிந்த செலவுக்குப் போதுமானவையாக இல்லாததால், குடிமக்களிடமிருந்து பெறும் வரித்தொகையை மேலும் மேலும் பெருக்கவேண்டியவனானான் அறிவுடைநம்பி.

அரசனின் அறிவு ஆற்றல் கண்டு மக்கள் எவ்வளவுக்கெவ்வளவு அவனைப் போற்றிப் புகழ்ந்தார்களோ, அவ்வளவுக் கவ்வளவு அவனது ஒழுக்கக்கேடான நிலைகண்டு அவனை அருவருக்கத்தலைப்பட்டார்கள். தடவைக்குத் தடவை தாம் செலுத்தும் வரித்தொகை உயர்ந்துகொண்டே போவதுகண்டு குடிமக்கள் மிகவும் துயருற்றனர். நிலத்திலிருந்து கிடைக்கும் வருவாயில் பெரும்பகுதியை அரசனுக்குக் கொடுத்துவிட்டுச் சிறு பகுதியைத் தாம் வைத்துக்கொண்டு வாழவேண்டும் என்ற நெருக்கடி நிலை ஏற்பட்டபோது, குடிமக்கள் வாழும் வகைதெரியாது எங்கணும் வருந்தத் தொடங்கினர். இந்தக் குறையை அரசன் அறிவுடைநம்பியிடம் எப்படி எடுத்துச் சொல்லுவது என்று அஞ்சி உழவர்பெருமக்களும் நிலக்கிழார்களும் வாயடைத்து

வாளாக் கிடந்தனர். நிலைமை தாங்கமுடியாத தாக ஆனபொழுது உழுதுண்டுவாழும் குடி மக்கள், புலவர் பிசிராந்தையாரை அணுகித், தம் குறையை அறிவுடைநம்பியிடம் எடுத்துச் சொல்லி, மிகவரி வாங்கும் கொடுமையை நீக்க வேண்டும் என்று வேண்டிக் கேட்டுக்கொண் டனர். பிசிராந்தையாரும் ஒரு பெருநிலக்கிழா ராக இருந்த காரணத்தால் வரிக்கொடுமையை நன்கு உணர்ந்திருந்தார். நீதிக்குப் பாடுபட வேண்டும் என்ற நேர்மையுள்ளமும், ஏழைக் குடிமக்களின் கண்ணீரைத் துடைக்கவேண் டும் என்ற கடமையுள்ளமும் தூண்ட, பிசி ராந்தையார், மதுரை நகர் சென்று அறிவுடை நம்பியைப் பார்த்து, அவனை இடித்துரைத்து, அவனுக்கு அறிவுரை கூறவேண்டும் என்று எண்ணினர். அந்த எண்ணத்தோடு மதுரை நோக்கிச் சென்றார்.

பாண்டியன் அறிவுடை நம்பியின் நாளோ லக்க மண்டபத்தில் பிசிராந்தையார் நுழைந்த வுடன், அறிவுடைநம்பி எழுந்து புலவரை வரவேற்று, வணக்கஞ்செலுத்தி, தனி இருக் கையில் இருக்கச் செய்து, தானும் உட்கார்ந் தான். புலவர் வாய்திறவாமல் அப்படியே வீற்றிருந்தார்.

“புலவர் பெருமானே! ஏன் வாட்டமும் வருத்தமுமாக இருக்கிறீர்கள்?” என்று அர சன் வினவினன்.

“எல்லாம் உன்னால் ஏற்பட்ட விளைவு தான்!” என்று புலவர் சற்றுக் கடுகடுத்த முகத்தோற்றத்தோடு கூறினர்.

உடனே அரசன் திடுக்கிட்டுப்போய் “யான் செய்த பிழை என்ன?” என்று அச்சங்கலந்த குரலில் கேட்டான்.

“நீ செய்யவேண்டியதெல்லாம் செய்து விட்டு என்ன பிழை செய்தேன் என்று கேட் கிறாய்? இனி நீ செய்யக்கூடிய பெரும்பிழை என்ன இருக்கிறது?” என்று புலவர் சினம் பொங்கக் கேட்டார்,

அரசன் நடுநடுங்கிப்போய் இருந்த இடத்தை விட்டு எழுந்து புலவரை நோக்கி வணங்கி நின்றான். “பிழை ஏதேனும் இருந்தால் மன் னிக்கவேண்டும்” என்றான்.

“நீயோ ஒழுக்க நெறியினின்றும் தவறி னாய்! கடமை நெறியை மீறினாய்! உன்னு டைய உயர்ந்த அறிவு, ஒழுக்க மேம்பாட்டைக் காப்பாற்றிக்கொள்ளவும், கடமையுணர்ச்சியை நிலைநாட்டிக் கொள்ளவும் பயன்படவில்லையே!” என்று புலவர் சுட்டிக்காட்டினர்.

குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுத்தபோதி லும், “பெருமைக்குரிய பெரியோரே! தாங் கள் எதைக் குறிப்பிடுகிறீர்கள் என்பது எனக்குப் புரியவில்லையே!” என்று அரசன் பணிந்து கேட்டான்.

“உன்னை இடித்துரைப்பார் யாரும் இங்கு இல்லாததால். உனக்கு எதுவும் புரியாது தான்!” என்று புலவர் மறுமொழி பகர்ந்தார்.

“புலவர் பெருமானே! எனக்குப் புரியும்படி தாங்கள்தான் அறிவுறுத்த வேண்டும்” என்று அரசன் தாழ்மையாய்க் கேட்டான்,

“நீ காதற்கிழத்திகளின் காம வலையில் சிக்கிச் சீரழிந்து கிடப்பதையும்; நீ நாள்தோ றும் அக்காதற்கிழத்திகளின் தரம் தெரியாத ஆரவாரம்மிக்க சுற்றத்தார்களின் சொற்களைக் கேட்டுக், குடிமக்களின் அன்பு கெடும்படி, மிக் வாக இறை (வரிப்பணம்) வாங்கும் நெறியற்ற முறையையுந்தான் குறிப்பிடுகிறேன்” என்று புலவர் கூறினர்.

புலவரால் இடித்துக்காட்டவேண்டிய நிலைக் குத் தான் வந்துவிட்டோமே என்பதை எண்ணி அரசன் நாணப்பட்டுச் “சான்றோரே! என் பிழையெல்லாம் பொறுக்கவேண்டும்” என்று கேட்டுக்கொண்டான்.

“நான் பொறுப்பது அல்ல முக்கியம்; நீ திருந்தவேண்டும் என்பதுதான் முக்கியம்” என்று பிசிராந்தையார் கூறினர்.

“தாங்கள் சொல்லும் அறிவுரையின்படி இனி நடக்கிறேன்!” என்று கூறிக்கொண்டே அரசன் புலவரின் காலடியில் வீழ்ந்தான்.

பிசிராந்தையார் சட்டென்று எழுந்து அரசனைத் தூக்கி நிறுத்தி, “முற்றிக் காய்ந்த நெல்லை அறுவடை செய்து காப்பாற்றி வைத்துக்கொண்டு, வாயளவு கொண்ட கவ ளம் கவளமாக அதனை யானைக்குக்கொடுத்துக் கொண்டுவந்தால், ஒரு மாவுக்குக் குறைந்த நிலத்தில் விளைந்த குறைந்த அளவு நெல்லாக அது இருந்தபோதிலும், அது யானைக்குப் பல நாட்களுக்கும் உதவக்கூடிய தீனியாக இருந்துவரும். ஆனால், யானை தானே வயலில் புகுந்து உணவு உண்ணத்தொடங்கினால், அந்த வயல் நூறுவேலி நிலப்பரப்புடைய தாக இருந்தாலும், யானையின் வாயில் செல் லும் நெல்மணிகளைவிட, யானையின் காலில் பட்டுப் பாழ்படும் நெல்மணிகளின் அளவு ஏராளமானதாக இருக்கும் அல்லவா?” என்று புலவர் அரசனை நோக்கிக் கேட்டார்.

" ஆமாம் !" என்றான் அரசன்.

புலவர் மேலும் கூறும்போது, " அது
ால, அறிவுடை வேந்தனாக இருக்கும் ஒரு
ன் வரி வாங்கவேண்டிய அரசு முறைப்படி
ங்கினால், அந்த முறை அவனுக்கு மிகுந்த
பாருளை ஈட்டித் தருவதோடு, அவ்வரசனது
ட்டையும் தழைக்கச் செய்யும். ஆனால் அப்
டிக்கில்லாமல் குடிமக்களின் அன்பு கெடும்
டியாக மிகுதியாக வரி வாங்க முற்பட்டால்,
னை புகுந்த வயல்போல குடிமக்களின்
மைதியான வாழ்வு சீர்குலையும்; யானையின்
லால் நெல்மணிகள கெடுவதைப்போல,
ரசனது கொடுமையால் குடிமக்களின் வரி
காடுக்கும் அன்புநிலை கெடும்; யானை எப்ப
த் தான் நெல்மணி உண்ணமுடியாமற்
பாகிறதோ! அதுபோல அரசனும் செல்வத்
ன் பயனை நுகரமுடியாமற்போவான்; நெல்
வயல் எப்படிப் பாழ்பட்டுப் போகுமோ அது
போலக் குடிமக்களும் பாழ்பட்டுப்போவர்.
இதனை நீ தெளிவாக உணரவேண்டும்"
என்று அறிவுறுத்தினார்.

" நான் செய்த பிழையெல்லாவற்றையும் மன்னிக்கவேண்டும்! இனி ஒழுக்கநெறி தவறேன்; கடமை நெறி மீறேன்! இது உறுதி!" என்று அரசன் அறிவுடைநம்பி கூறப், பிசிராந்தையார் பெருமகிழ்வுற்றுத் தம்மூர் நோக்கித் திரும்பினார்.

ஃ ஃ ஃ

பெரும்புலவர் பிசிராந்தையார் புறநானூற்றுப் பாடலில் குறிப்பிட்டுள்ள உட்கருத்தைக் கொண்டு தீட்டப்பட்ட சொல்லோவியமே மேலே காணப்படுவதாகும்.

காய்நெல் அறுத்துக் கவளம் கொளினே
மாநிறை(வு) இல்லதும் பன்னாட்கு ஆகும்;
நூறுசெறு ஆயினும் தமித்துப்புக்(கு) உணினே
வாய்புகு அதனினும் கால்பெரிது கெடுக்கும்;
அறிவுடை வேந்தன் நெறியறிந்து கொளினே
கோடி யாத்து நாடு பெரிது நந்தும்;
மெல்லியன் கிழவ னாகி வைகலும்
வரிசை அறியாக் கல்லென் சுற்றமொடு
பரிவுதப எடுக்கும் பிண்டம் நச்சின்
யானை புக்க புலம்போலத்
தானும் உண்ணான், உலகமும் கெடுமே.

[புறநானூறு—184]

[பொழிப்புரை : காய்ந்து முற்றிய நெல்லை அறுத்துக் கவளம் கவளமாகக் கொண்டால், ஒரு மாநிலத்துக்கும் குறைந்த நிலத்தில் விளைந்த நெல்லாக இருந்தாலும், அது யானைக்குப் பலநாட்களுக்குத் தீனியாகவரும்; நூறுவேலி நிலமாக இருந்தாலும், யானை தானே புகுந்து உண்ணத் தொடங்கினால், யானையின் வாய்க்குள் புகும் நெல்லைக்காட்டிலும் யானையின் கால் மிகுதியான அளவு நெல்லைக் கெடுத்துப்போடும். அறிவுடைய அரசன் வரிவாங்கும் அரசுமுறைப்படி வரியைக் கொண்டால், அந்த முறை மிகுந்த பொருளை ஈட்டித் தருவதோடு மட்டுமல்லாமல் நாட்டையும் பெருமளவுக்குத் தழைக்கச்செய்யும்; காதற்கிழத்திகளுக்கு உரிமையுடையவனாகி, நாள்தோறும் தரம் அறியாத ஆரவாரம் மிக்க சுற்றத்தார்களின் தீயமொழிகேட்டு மக்களின் அன்புகெட வாங்கும் வரிப்பணத்தை அரசன் விரும்புவானேயானால் அந்த முறையினால் யானைபுகுந்த வயல்போல, அவன் தானும் செல்வத்தின் பயனை நுகராதவனாக ஆவான்; குடிமக்களும் கெட்டுப்போவர்.

கவளம் - உணவுத்திரள்; மா - ஒருமா, ஒருவேலி நிலத்தில் இருபதில் ஒருபங்கு; செறு - வயல்; நெறி - அரசுமுறை; கோடி - மிகுந்தபொருள்; யாத்து - ஈட்டிக்கொடுத்து; நந்தும் - தழைக்கும்; மெல்லியல் கிழவன் - பெண்வழிச் சேர்ந்தவன்; வைகலும் - நாள்தோறும்; வரிசை - தரம்; கல் - ஆரவாரம்; பரிவு - அன்பு; தப - கெட; பிண்டம் - பொருள்தொகுதி, குவியல்; நச்சின் - விரும்பின்; புலம் - நிலம்.]

ஃ ஃ ஃ

பண்டைத் தமிழகத்தில் அறிவுசான்ற தமிழ்ப் பெரும்புலவர்கள் எவ்வளவு செல்வாக்குப் படைத்திருந்தனர் என்பதையும், நாடாளும் அரசன் தவறிய வழி, சிறிதும் அச்சங்கொள்ளாமல் அவனை எவ்வாறெல்லாம் இடித்துரைத்து அறிவு கொளுத்தினர் என்பதையும், நாட்டிற்கான நற்பணிபுரிவதிலே அவர்கள் எவ்வளவு தணியா ஆர்வங்கொண்டிருந்தனர் என்பதையும் இச்செய்யுளின் மூலம் இனிது அறிந்துகொள்ளலாம்.

பிசிராந்தையார், வேறோர் புறநானூற்றுப் பாடலில், தமக்கு ஏவலாளர்கள் இருந்தனர் என்று குறிப்பிடுவதாலும், அரசன இறை (நிலவரி) வாங்கவேண்டியதன் முறையை வற்புறுத்திக் கூறுவதாலும், மிக்க வரி வாங்கு[...] தால் ஏற்படும் கொடுமையைச் சுட்டிக்காட்டு[...] தாலும் அவர் ஒரு பெருநிலக்கிழாராக வாழ்[...] தார் என்று கொள்ளுவதற்கு இடமிருக்கிறது[...] யானைக்குக் கவளம் கவளமாகத் தீனிபோடு[...] தையும், யானை வயலில் புகுந்து தானே உண்ணுவதையும் அவர் உவமையாக்கி இச்செய்யு[...] ளில் கூறுவதிலிருந்து, அவர் யானைகட்டி[...] தீனிபோடும் அளவுக்குப் பெருநிலக்கிழாரா[...] வாழ்ந்தார் என்று எண்ணுவது தவறாகாது.

இச்செய்யுளில் வந்துள்ள உவமைநய[...] நினைந்துநினைந்து மகிழ்தற்குரியதாகும்.

புலவர் அரசனுக்கு அஞ்சாமல், அவனது குற்றத்தைச் சுட்டிக்காட்டி இடித்துரைக்கு[...] திறம் போற்றிப் பாராட்டுதற்குரியதாகும்.

●●

பலசரக்குக்கடை பாண்டுரங்கம் செட்டியாருடைய எட்டு வயதுப் பையன் ஆற்றில் குளித்துக்கொண்டிருந்தான். தன்னுடைய நிலைக்கு அப்பாற்பட்டு, அவன் அடிவைத்ததும், பெரிய சுழலில் அகப்பட்டு, பின் வெள்ளம் தள்ளிக்கொண்டு போனது. பக்கத்தில் குளித்துக்கொண்டிருந்தவர்கள் "ஐயோ! ஐயோ!" என்று கூச்சல் போட்டார்கள். அப்பொழுது ஆற்றங்கரையில் வண்டியில் போய்க்கொண்டிருந்த ஒருவர், கூச்சல்போட்டதைக் கேட்டு, வண்டியை நிறுத்திவிட்டு ஓடிவந்தார்.

"என்ன, என் கூச்சல்?"

"அதோ! பையன் வெள்ளத்தில் போகிறான்" என்று சுட்டிக்காட்டினார்கள். வெள்ளத்தின் மத்தியில் பையன் தத்தளிப்பது தெரிந்தது. வந்தவர் உடனே ஆற்றில் குதித்தார். வெள்ளம் பலமாக இருந்ததால் அவராலும் நிலைகொள்ளமுடியவில்லை. தன்னுடைய ஆபத்தையும் பொருட்படுத்தாமல், அவர் மிகக் கஷ்டப்பட்டு, பையனைப் போய் இழுத்துக்கொண்டுவந்து, கரையில் சேர்த்தார்.

கரையில் இதற்குள் கூட்டம் சேர்ந்துவிட்டது. அவர்கள் பையனின் மூர்ச்சையை தெளியவைத்தார்கள். பையன் பிழைத்துக்கொண்டதும், எல்லோரும் ஆரவாரத்துடன், அவனைக் காப்பாற்றியவரின் தீரத்தைப் பற்றி பேசி, புகழ்ந்தார்கள். இதற்குள் கடைக்குச் செய்திபோய், பாண்டுரங்கம் செட்டியார் வந்தார். நடந்த விவரங்களைக் கேட்டதும், "ஆற்று வெள்ளத்தில் அவனைப் போய் எடுத்துவந்தது யார்?" என்று கேட்டார்.

"அதோ! மரத்தடியில், தண்ணீரைத் துடைத்துக்கொண்டிருக்கிறாரே அவர்தான்!" என்று கூட்டம் சொல்லியது.

பாண்டுரங்கம் மரத்தடிக்குப் போய் "அந்தப் பையனைத் தண்ணீரிலிருந்து தூக்கிவந்தது நீர் தானே?" என்று கேட்டார்.

"ஆமாம்!"

தன் பிள்ளையின் உயிரைக் காப்பாற்றியவருக்கு ஏதாவது நன்றிவார்த்தை. சன்மானம் செய்யப் போகிறார் என்று கூட்டத்தினர் நினைத்தார்கள். ஆனால் பாண்டுரங்கம் கேட்ட மறு கேள்வி அவர்களைத் திகைப்படையச்செய்தது.

பாண்டுரங்கம் கேட்டது. "சரிதான்! அந்தப் பையன் கட்டியிருந்தானே, ஒரு பட்டுக்கரை வேட்டி, அது எங்கே?" என்பதாகும்!



அண்ட சராசரம்

இரா. செழியன்

(19)

ஒருசமயம் நகுஷன் என்பவன் ஆயிரம் அசுவமேத யாகங்கள் செய்து முடித்தான். அதன் பயனாக அவனுக்கு இந்திரபதவி கிடைத்தது. இந்திரன் பதவியிழந்து ஓடி ஒளிந்தான். இந்திரபதவி மாறியதேயொழிய இந்திராணி பதவி மாறவில்லை. எவர் இந்திர பதவிக்கு வருகிறார்களோ அவர்களுடைய மனைவியாக இந்திராணி ஆகிவிடவேண்டும்,

நகுஷனுக்கு இந்திரபதவி கிடைத்ததும், அவன் இந்திரலோகத்துக்கு வந்து அரசை ஏற்றுக்கொண்டான். முதலில் அரசகாரியங்களைக் கவனித்ததும், நகுஷன் இந்திராணி இருக்கும் அந்தப்புரத்துக்கு வந்தான், அவளை மனைவியாக அடையும் உரிமை பாராட்டி. பாவம்! அந்தப் பதிவிரதை என்ன செய்வாள்? மணந்துகொண்டது இந்திரனை, இப்பொழுது உரிமை கொண்டாடுவதோ மாற்றானொருவன்! உடன்படவும் முடியாமல், மறுக்கவும் முடியாமல் அவள் திண்டாடினாள், முதல் நாள் வந்த நகுஷனை ஏதோ பேச்சுக்கொடுத்து மறுபடியும் வரும்படி கூறி அனுப்பிவிட்டு, ஓடி ஒளிந்திருக்கும் தனது கணவனைத் தேடிச் சென்றாள். ஒரு முனிவரின் உதவியால், ஒளிந்து வாழும் வீரன் இந்திரனைக் கண்டு, அரண்மனையில் வளர்ந்துள்ள விபரீத நிலையை அவள் விளக்கினாள்!

இந்திரனின் யோசனைப்படி மறுநாள் நகுஷன் வந்தபொழுது, "சப்த ரிஷிகள் சுமந்து வரும் பல்லக்கில் ஏறி, நீ என்னுடைய அந்தப்புரம் வருவீராக!" என்று புன்முறுவலுடன் சொல்லி அனுப்பினாள். மிகுந்த மகிழ்ச்சியுடன் நகுஷன் இரவு நேரத்தை எதிர்பார்த்துக்கொண்டிருந்தான்.

இரவு வந்ததும், புதிய இந்திரன் கட்டளைப்படி சப்தரிஷிகளும் பல்லக்கைத் தூக்கிக் கொண்டு வைத்தார்கள். அலங்கார ஆடைகளையும் அணிமணிகளையும் அணிந்து, நகுஷன் இந்திராணி மாளிகையை நோக்கிப் பல்லக்கில் புறப்பட்டான். அவனுடைய ஆவலின் வேகத்திற்கு நேர் மாறாக, பல்லக்கு மிக மெதுவாக அசைந்து, அசைந்து போய்க்கொண்டிருந்தது. அதிலும் ஒரு பக்கம் தரையோடு இடிப்பதுபோலத் தாழ்ந்து இருந்தது. கீழே பார்த்தால் சப்த ரிஷிகளில் ஒருவரான அகத்தியர் அங்கு பல்லக்கைத் தாங்கிக் கொண்டிருந்தார்! தாமதம் ஏற்படுவதைக் கண்டதும் நகுஷனுக்குக் கோபம் வந்தது. "வேகமாகப்போ. வேகமாகப்போ!" என்று பொருள்படும்படி "சர்ப்ப, சர்ப்ப!" என்று அதட்டினான். உடனே அகத்தியருக்குக் கோபம்வந்து, பல்லக்கைக் கீழே போட்டு, "சர்ப்பமாகுக!" என்று அவனைச் சபித்தாராம். உடனே நகுஷன் பாம்பாகி மண்ணுலகத்தில் விழுந்துவிட்டான். ஓடி ஒளிந்திருந்த இந்திரன் மீண்டும் தேவலோக அரசுக்கு வந்தான். இந்திராணிக்கு ஏற்பட்டச் சங்கடநிலை தீர்ந்தது.

இந்தப் புராணக் கதையில் அகத்தியர் தந்த சாபத்தால் நகுஷன் பாம்பானதும், அதனால் இந்திராணி காப்பாற்றப்பட்டதும் விளக்கப்படுகிறதேயன்றி, இந்திரபதவிக்கு யார் வந்தாலும் அவர்களுடைய மனைவியாக ஆக வேண்டிய அவல நிலையில் இந்திராணி இருந்ததைப் பற்றி புராணிகர் கவலைப்பட்டதாகத் தெரியவில்லை.

இந்திராணி நகுஷனிடமிருந்து தப்பித்துக் கொள்ளப் பாடுபட்டாலும், அவள் தனது மனதை வேறெவரிடமும் பறிகொடுக்காமல் இருந்தாள் என்று சொல்லமுடியாது. ஒரு சமயம் அவள் இந்திரனுடன் வைகுண்டம்

சென்றிருந்தாள். அங்கு லட்சுமி, திருமால் இவர்களால் வரவேற்று உபசரிக்கப்பட்டார்கள். இந்திராணி திருமாலைத் தனியாகப் பார்த்தபொழுது "எனக்கு உங்களிடம் ஒரு வரம் வேண்டும்!" என்று கேட்டாள். திருமால் எல்லாவற்றையும் காத்துப் பராமரிக்கும் பொறுப்பையுடையவர். வேண்டியவர்கள் யாரும் கேட்டால் இல்லையென்று சொல்வதில்லை. அதிலும் தேவலோகத்து அரசியென்றால் அவர் மறுப்பாரா?

"என்ன வரம் வேண்டுமோ, கேள், தருகிறேன்!" என்று திருமால் அருள்கூர்ந்தார்.

வரங்கேட்க அனுமதி கிடைத்ததும் இந்திராணி கூச்சத்துடன் நின்றாள்.

"நான்தான் தருகிறேனென்று சொன்னேனே, கேள் தருகிறேன்!" என்று திருமால் சொன்னார்.

மிகக் கூச்சத்துடன் நின்ற இந்திராணி, திருமாலைக் கடைக்கண்ணால் பார்த்தபடி, நாணிக்கோணி, புன்முறுவலுடன் "உங்கள் மடிமிசை நான் அமர அருள் புரியவேண்டும்" என்று வரங்கேட்டாள்!

ஒருவனுடைய மனைவி மாற்றான் ஒருவனுடைய மடிமிசை அமர விருப்பங்கொண்டாள் என்றால் என்ன அர்த்தம்?

"மிக ஆபத்தான வரம்!" என்று திருமால் யோசித்தார். இந்திரனின் மனைவியைத் தன் மடிமிசை வைத்துக்கொள்வது தகுமா என்று அவர் யோசிக்கவில்லை. வைகுண்டத்தில் அவரைக் கண்காணித்துக்கொண்டிருக்கும் ஸ்ரீதேவி, பூதேவி இருவரில் யாராவது கவனித்துவிட்டால் என்ன செய்வதென்ற கவலைதான் அவருக்கு.

"பிரபு! எனக்கு அருள்புரியமாட்டீர்களா?" என்று இந்திராணி கேட்டாள்.

"இந்திராணி! உனக்கு இப்பொழுது அருள்புரிய என்னால் முடியாது? ஆனால் அதற்காகக் கலங்காதே, தேவலோகத்து அரசியே! நான் பூலோகத்தில் துவாரகை என்ற இடத்தில் கிருஷ்ணனாக அவதாரம் செய்வேன். அப்பொழுது நீயும் அங்கு மானிடப் பெண்ணாக அவதாரம் எடுத்துவா, உன் விருப்பத்தை நிறைவேற்றிவைப்பேன்" என்று திருமால் கருணை கூர்ந்தார்.

இந்திராணி பெருமகிழ்வடைந்தாள்!

"ஆனால், ஒன்று! துவாரகையில் பிறந்து எனக்குப் பிரியமானவளாக ஆகவேண்டுமென்றால், அதற்கு இப்பொழுதே தொடங்கி நீண்டகாலம் தவம் செய்யவேண்டும்."

"எவ்வளவு காலம் தவம் செய்யவேண்டும் பரமாத்மா!" இந்திராணி கேட்டாள்.

"மிக நீண்டகாலம்! நாற்பதாயிரம் வருஷங்கள் தவஞ்செய்யவேண்டும்!" என்று தவத்தின் கடுமைபற்றித் திருமால் தெரிவித்தார்.

"பரவாயில்லை, உங்கள் மடிமிசை அமர்ந்து இன்புறும் பாக்கியம் எனக்குக் கிடைப்பதென்றால், அந்த நீண்ட தவத்தை மேற்கொள்வேன்! போய் வருகிறேன், பிரபு!" என்று இந்திராணி விடைபெற்றாள்.

"மீண்டும் பூலோகத்தில் சந்திப்போம்!" என்று திருமால் ஆசீர்வாதந் தந்து அனுப்பினார்.

திருமாலின் சொற்படி, இந்திராணி பூலோகத்திற்குப் போய் நாற்பதினாயிரம் ஆண்டுகள் தவஞ்செய்தாள். தவத்தின் முடிவில், அவளுக்குக் கோகுலத்தில் இராதையாகப் பிறக்கும் பாக்கியம் கிடைத்தது. பின் திருமால் கண்ணனாகப் பிறந்து, கோகுலத்திற்கு வந்தார். அப்புறம் பாலகிருஷ்ணனும் இராதையும் வேடிக்கை விளையாட்டுகளில் ஈடுபட்டிருந்தனர், ஊரார் கண்டு இராதையின் கணவனிடம் புகார் செய்யுமளவுக்கு!

கம்சனைக் கொல்ல கண்ணன் புறப்பட்டு சென்றபின், கோகுலத்துக்குத் திரும்பி அவன் வரவில்லை. ருக்மணியை மணந்து, துவாரகையிலிருந்து அரசாளத்தொடங்கினான். இராதையாக இந்திராணி, கோகுலத்தில் தனியாக விடப்பட்டு வாடினாள். கண்ணனைக் காண வேண்டுமென்ற ஏக்கத்துடன், இராதை தன் உருவத்தை மாற்றிக்கொண்டு கோகுலத்தை விட்டு ஓடித் துவாரகைக்கு வந்தாள். துவாரகையிலிருந்த கட்டுக்காவல்களை மீறிக், கடைசியாக அரண்மனை மண்டபமொன்றில் கிருஷ்ணனைக் கண்டாள்.

அந்த அலங்கார மண்டபத்தில் மிக ரம்மியமான ஊஞ்சலில் அமர்ந்து கிருஷ்ணபரமாத்மா தனக்குப் பிரியமான வேணுகானத்தை மீட்டிக்கொண்டிருந்தார். அவரைக் கண்டதும் இராதை ஆனந்தப் பரவசமாகி, முன் மண்டியிட்டு, "பிரபு!" என்று வணங்கினாள்.

அவ்வளவில் கிருஷ்ணன் குழலைக் கீழே வைத்து, ஊஞ்சலை நிறுத்தி, மண்டியிட்டிருக்கும் பெண்ணை எழுந்திருக்கச் செய்தா[ர்]

இராதை மாற்றுருவில் இருந்தாலும், அவ ரால் எதிரே இருக்கும் பெண் யாரென்று தெரிந்துகொள்ள முடிந்தது. எதிரே நிற்பது இராதை மட்டுமல்ல, முன்பு தன்னுடைய சொற்படி பூலோகத்துக்கு வந்த இந்திராணி என்பதும் அவரது ஞாபகத்தில் இருந்தது. இந்திராணிக்குக் கொடுத்த வரத்தையும் அவர் மறந்துவிடவில்லை. இராதையாகிய இந்திராணியை அழைத்துப்போய், ஊஞ்சலில் தன் மடிமிசை அமர்த்திக்கொண்டார்!

மிக உல்லாசமான நேரம்! மெய்மறந்து இராதை மனமகிழ்ச்சியுடன் இருக்கும் சமயம்! இந்த கட்டத்தில், ருக்மணி அங்கு வந்துவிட்டாள்! அங்கு கிருஷ்ணனும், அவர் மடியில் இராதை அமர்ந்து கொஞ்சிக்கொண்டிருப்பதையும் கண்டு அவள் திடுக்கிட்டு, "ஆ!" என்று கூச்சலிட்டுவிட்டாள். இராதை பதறி எழுந்தாள். கிருஷ்ணன் எழுந்துவந்து ருக்மணியைச் சமாதானம் செய்ய முயன்றார்.

ருக்மணியின் கோபம் மிகப் பொல்லாததாக இருந்தது. எவர் தடுத்தும் கேளாமல், அரண்மனையைவிட்டு வெளியேறி, திண்டரம் என்ற காட்டுக்குப் போய் தவஞ்செய்ய ஆரம்பித்தாள்.

இந்தச் சம்பவத்துக்குப் பின் இராதையால் துவாரகையில் தங்கியிருக்கமுடியவில்லை. வேறு வேடம் மாற்றிக்கொண்டு, அவளும் திண்டரவனம் சேர்ந்து, அங்கு ருக்மணியைத் தேடினாள். கடைசியாகத் தவக்கோலத்துடன் இருக்கும் ருக்மணியைக் கண்டுபிடித்து, மறுபடியும் துவாரகை போகும்படி வற்புறுத்தினாள். இராதை மாறுவேடத்திலிருந்தாலும், அவளை யாரென்று கண்டுகொண்ட ருக்மணி, "வஞ்சக உருக்கொண்டவளே! என்னைவிட்டகல்க!" என்று துரத்தியடித்தாள். மனம் நொந்த இராதை வேறோர் பக்கம் போய் தவம் செய்ய ஆரம்பித்தாள்.

இந்திராணி திருமாலிடம் வைத்த 'பக்தி'யில் ஏற்பட்ட புராணக்கதையிது.

மற்றொரு கதைப்படி, இந்திராணி துருபதன் யாகத்தில் துரௌபதியாகப் பிறந்து, பாண்டவர்கள் ஐவரையும் மணந்து இன்புற்றாள் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

சயந்தன்

இந்திரனுக்கு இந்திராணியிடம் பிறந்தவன் சயந்தன். சுவர்க்கலோகத்துக்கு இவன் இளவரசனாவான். இந்திரன் பதவியிலிருந்து விரட்டப்படும்பொழுது சயந்தனும் இந்திரபுரியிலிருந்து ஓடிவிடுவான். அசுரர்களுக்கும், தேவர்களுக்கும் போர் நடக்கும்பொழுது, சயந்தன் பலதடவை சிறைபிடிக்கப்பட்டிருக்கிறான்.

தேவலோகத்து இளவரசனாக யிருந்ததால், தேவ மாதர்கள் பலரை இவன் தன் பஞ்சணையில் வீழ்த்தியிருக்கிறான். முதலாவதாக இவனை மயக்கியவள் உருப்பசியாகும்.

ஒருசமயம் இந்திரனின் சபையில் உருப்பசி நடனமாடிக்கொண்டிருந்தாள். அப்பொழுது இளவரசனான சயந்தன் மண்டபத்தில் நுழைந்து, இந்திரன் பக்கத்தில் அமர்ந்தான். சயந்தன் ஒரு சிறுவன் என்று இதுவரைத் தெரிந்திருந்ததேயொழிய, கட்டிளங் காளையாகும் பருவத்திற்கு வந்துவிட்டான் என்பது உருப்பசிக்குத் தெரியாது. நடனமாடி வரும் பொழுது, இந்திரன் அருகில் வரும்பொழுது சயந்தனைப் பார்த்துவிட்டாள்! புதிய விருந்து, அதை எப்படியும் அடைந்துவிட வேண்டும் என்று தீர்மானித்துவிட்டாள். பின்பு உருப்பசியின் ஆடலின் போக்கு மாறியது, அவளுடைய பார்வை அடிக்கடி சயந்தனைப் பற்றியிழுத்தது. "வா! வா!" என்று பாடலுடன், அருகழைத்தாள் சயந்தனை, கட்டியணைத்தாள், காமக்குறிப்புகளைத் தந்தாள், எல்லாம் நடனரூபத்தில் முதலில் யாராலும் அவளுடைய நடனத்தில் ஏற்படும் பாவனைகளைக் கண்டுகொள்ளமுடியவில்லை. வழக்கம்போல் நடனத்தில் ஏற்படுபவை என்று நினைத்திருந்தனர்.

வர, வர, உருப்பசியின் நடனம் நிலைதவறியது, பாடுகின்ற பாடலுக்கும், அவளுடைய ஆட்டத்துக்கும் தொடர்பின்றியிருந்தது, தாளத்தைவிட்டு, அபிநயங்களைவிட்டு, அவளுடைய நடனம் வேறு வகையில் போய்விட்டது.

உருப்பசியின் கண்வீச்சுப் பட்டுப்பட்டு, சயந்தனின் கன்னங்கள் சிவந்துவிட்டன, ஆவல் நிறைந்த கண்களுடன், உருப்பசியைப் பார்த்தபடி அவன் உட்கார்ந்திருந்தான்.

உருப்பசியின் ஆடல் எந்தவகையிலும், கொட்டு, முழக்கு, வீணை இவைகளுடன் ஒத்துவரவில்லை, ஆதலால் கொட்டு, முழக்கு இவைகள், நின்றுவிட்டன. இருந்தாலும், மதுவுண்டு மயங்கியவளைப்போல உருப்பசி ஆடினாள், அணிகள் குலைவதையும், ஆடைகள் நெகிழ்வதையும் கவனியாமல். கடைசியில் உருப்பசிக்குக் காமப்பசி அதிகமாக, நிலை

தளர்ந்து விழுந்துவிட்டாள். சயந்தன் ஓடிச் சென்று, அவளைத் தூக்கி உட்காரவைத்தான், பணிப்பெண்கள் வந்து, உருப்பசியின் மயக்கத்தைத் தீர்த்தனர்.

உருப்பசி நடனமாடமுடியாமல் விழுந்ததற்குக் களைப்பு என்றும், மயக்கமென்றும் தேவர்கள் பல காரணம்கூறினர்கள். ஆனால் அன்று இந்திரசபைக்கு வந்திருந்த அகஸ்தியருக்கு மட்டும், உருப்பசியின் நடனம் குலைந்ததற்கான காரணம் தெரிந்துவிட்டது. அகஸ்தியர் முனிபுங்கவர், முற்றும் துறந்தவர், அவர் ஏன் உருப்பசியின் நடனத்தைப் பார்க்க வந்தார் என்று கேட்கலாம், மேலும் மற்றவர்களால் அறிந்துகொண்டு நிச்சயிக்கமுடியாத காமக்குறிப்புகளை அவர் எப்படித் தெரிந்துகொண்டார் என்றும் நினைக்கலாம். ஆனால் எவ்வாறு, இந்திரசபையில் முதலாவதான் இடத்தில் அமர்ந்து, நடனத்தைப் பார்த்துக்கொண்டிருந்தார். நடனம் தடைப்பட்டு, சபை கலைந்ததும், உண்மையான காரணத்தைக் கண்ட அவருக்கு சயந்தனின்மேல் கோபம் உண்டானது, அவனை மயக்கிய உருப்பசியின் மீதும் கோபம் வந்தது. உடனே சயந்தனை விந்தியமலையில் ஒரு மரமாகவும், உருப்பசியை மானிடப் பெண்ணாகவும் மாறிப்போகும்படி சபித்தாராம். முதல் மோகத்தில், சயந்தனுக்குக் கிடைத்த பலன், மரமானதுதான். சாப விமோசனம் கிடைத்ததும், சயந்தன் தேவருலகம் மீண்டும் வந்தான்.

இந்திரனுக்குச் சரியான மகனாக சயந்தன் இருந்தான். கானகத்தில் தனித்திருக்கும் பெண்களையும், முனிபுங்கவரின் பத்தினிகளையும் இந்திரன் மாறுவேடம்பூண்டு கைப்பற்றுவது வழக்கம். அவனுடைய மகன் சயந்தனும் அதேபோல் பூலோகத்தில் சுற்றித்திரிந்தான், கவனிப்பாரற்ற கன்னியரைத் தேடி. ஒருசமயம் பூலோகத்திலுள்ள காட்டில் ஒரு அழகிய பெண்ணைக் கண்டான், அவளைக் கண்டதும் அவள்மீது விருப்பமும் கொண்டான். அந்தப் பெண் வேறு யாருமில்லை, சாட்சாத் சீதாபிராட்டியார்தான்!

அப்பொழுது சீதையும் ராமனும், ஆரண்ய காண்டத்தில் இருந்தனர். கைகேயி கேட்ட வரத்திற்கிணங்க, பரதனுக்குப் பட்டத்தை அளித்து, இராமபிரான் சீதாபிராட்டியுடனும், தம்பி இலக்குமணனுடனும் அயோத்தியை விட்டு நீங்கி, காட்டிற்கு வந்து, சித்திரகூடம் என்ற மலைக்கருகில் பர்ணசாலை அமைத்து வாழ்ந்திருந்தார். அந்த சமயத்தில் ஒரு நாள் சீதாபிராட்டியார் ஒரு மரத்தடியில், மாவிலை மெத்தையில் படுத்துறங்கிக்கொண்டிருந்தார். சற்று தூரத்தில் இராமன் அமர்ந்து, வில்லை திருத்திக்கொண்டிருந்தார். தம்பி இலக்குமணன் காய்கனிகள் எடுத்துவரக் காட்டிற்குள் போயிருந்தான். உறங்கும்பொழுது, சீதாபிராட்டியின் மேலாடை நெகிழ்ந்து, மார்பகம் விம்முற்றுத் தெரிந்தது. இந்தக் காட்சியைக் கண்டதும் இந்திரன் குமரன் சயந்தன் காமபரவசனாய், காக்கை உருவம் எடுத்துப் பக்கத்தில் போய், சீதாபிராட்டியாரின் கோலத்தைக் கண்டுகளித்தான். காக்கை மெதுவாகத் தத்தித்தத்தி மிக அருகில்போய் நின்றது. பிராட்டியார் மூச்சுவாங்குவதும், அதனால் மார்பகம் விம்மித் தணிவதும் தெரிந்தது. காக்கை இன்னும் பக்கத்தில் போய் தனது மூக்கால் (வாயால்) சீதையின் மார்பகத்தை அலையத்தொடங்கியது. சீதை தூக்கம் கலைந்து, காக்கையை விரட்டி, புரண்டு படுத்தார்கள்; ஆடை நெகிழ்ந்திருப்பதைக் கவனிக்கவில்லைபோலும். மார்பகம் முன்னிலும் அதிகப் பொலிவுடன் காட்சிதந்தது. காக்கையுருவிலிருக்கும் சயந்தன் முன்னிலும் அதிக காமக்கிளர்ச்சியுடன சீதாபிராட்டியின் மார்பின்மீது அமர்ந்து, காலாலும், மூக்காலும் மார்பகத்தை உணரத்தலைப்பட்டான். சீதை எவ்வளவு விரட்டியும் காக்கை போகவில்லை. சாதாரண காக்கையாக இருந்தால், உடனே ஓடியிருக்கும், இதுவோ தேவலோகத்துக் காக்கை! எப்படிப் போகும்? இதற்குள் காக்கையின் தாக்குதலால், பிராட்டியின் மார்பிலிருந்து இரத்தம் கசியத்தொடங்கியது. சீதை படும் துயரை இராமபிரான் பார்த்துவிட்டார்; மோச எண்ணத்துடன் வந்திருக்கும் காக்கை என்பதைக் கண்டுகொண்டார். உடனே பக்கத்தில் முளைத்திருந்த ஒரு புல்லைக் கிள்ளி காக்கையைப் பார்த்துவிட்டார்! அவ்வளவுதான்! அந்தப் புல் பயங்கர வேகமுடைய பிரமாஸ்திரமாக மாறி, காக்கையை விரட்டியது. காக்கை ஓடியதும், பிராட்டியார் எழுந்து, தன் உடையைத் திருத்திக்கொண்டார், இராமபிரான் அருகில்வந்து ஆறுதல் தந்தார்.

இந்தச் சம்பவம் கம்ப இராமாயணத்தில் சுந்தரகாண்டம் சூளாமணிப்படலத்தில் கூறப்படுகிறது. இராமதூதனை அநுமான் இலங்கையெங்கும் தேடி, கடைசியாக அசோகவனம் புகுந்து, அங்கு தற்கொலைக்குத் தயாராக இருக்கும் சீதாபிராட்டியார் முன்போய் நின்று, ராமநாமத்தை விளம்பி, தன்னை அறிமுகப்படுத்துகிறான். தன்னைப் பார்த்ததற்கு அடையாளமாகச் சீதை தான் வை

திருந்த சூளாமணியை அனுமானிடம் தருகிருள். அத்துடன் மேலேக் குறிப்பிட்ட, காக்கைத் தன் மார்பை வருடிய சம்பவத்தையும் அனுமானிடம் கூறி, இராமபிரானிடம் சொல்லும்படி வேண்டுகிருள்! அதைக் கம்ப நாட்டாழ்வார், சூளாமணிப்படலம் 77-ம் பாட்டில் அழகுற பாடுகிருர்:

"நாக மொன்றிய நல்வரை யின்றலே மேனுள்
ஆகம் வந்தெனே அள்ளுகிர் வாளி னளேந்த
காக மொன்றை முனிந்தயல் கல்லெழு புல்லால்
வேக வெம்படை விட்டது மெல்ல விரிப்பாய்"

மேல் நாள் - (வனவாசஞ் செய்யத்தொடங்கிய) முற்காலத்தில்,

நாகம் ஒன்றிய நல்வரையின் தலே - புன்னேமரங்கள் பொருந்திய அழகிய சித்திரகூடத்து மலேயில்,

வந்து - (அருகில்) வந்து

ஆகம் - (எனது) மார்பை

அள் உகிர் வாளின் - கூர்மையான வாள்போன்ற நகத்தினுல்,

அளேந்த - குத்தின

காகம் ஒன்றை முனிந்து - காக்கை ஒன்றை கோபித்து,

அயல் கல் எழு புல்லால் - பக்கத்தில் கல்லிடை முளேத்த புல்லேக்கொண்டு,

வேகவெம்படை - வேகத்தையுடைய கொடிய அம்பாக,

விட்டது - (இராமபிரான்) பிரயோகித்ததை,

மெல்ல விரிப்பாய் - (அவருக்கு நான் சொன்னேனென்று அடையாளமாக) மெதுவாகச் சொல்வாய்.

"காகம் ஒன்று தனது மார்பை அளேத்தது, அதைக் கண்டு கணவன் காகத்தை விரட்டினுன்." இந்தச் சம்பவத்தை அச்சமும் நாணமும் உடைய ஒரு மனேவி தனது கணவனிடம் குறிப்பாகச் சொல்லக்கூட கூச்சமடைவாள். ஆனுல் சீதாபிராட்டி, முன்பு சிறிது கூட அறிமுகமில்லாத அனுமானிடம் சம்பவத்தை நன்ருகப் படம்பிடித்துக் கூறுகிருள்! அடையாளமென்ருல் சூளாமணி கொடுத்தது ஒன்றே போதும்! அதற்குமேலும் அடையாளங்கள் தேவையில்லே! தேவையெனருலும், ஞாபகமூட்டக்கூடிய வேறு சம்பவங்கள் கிடைக்கவில்லேயா? கடிதமெழுதி அனுப்பினுலும் ஒரோவழி ஒருப்பாடுடையது. ஆனுல் இது வாய்மொழியாகப் பிறரிடம் தெரியப்படுத்துவது, காவியச் சுவையைக், கருதி போலும் காக்கை செய்த காமச்சேட்டை இராமாயணத்தில் சேர்க்கப்பட்டிருக்கிறது.

மேலே சொல்லப்பட்ட பாட்டில், சீதாபிராட்டியின் மார்பைத் தீண்டிய காகம் யார் என்று கூறப்படவில்லே. அதற்கு மேற்கொண்டு இரண்டாவது பாடலில், அதாவது 79-ம் பாடலில் "இந்திரன் தருமைந்தன் அருந்துயர் யாவும்" என்று காகம் பட்ட துன்பத்தை விளக்க, இந்திரனுடைய மைந்தன் பட்ட துயரமென்று கம்பர் குறிப்பிடுகிருர்.

சயந்தன் காகமாக உருவெடுத்து, சீதையின் மார்பைக் கொத்திய சம்பவம் கம்ப இராமாயணம், சுந்தரகாண்டம் சூளாமணிப்படலத்தில் 77 லிருந்து 82 வரை உள்ள ஆறு பாடல்களில் சொல்லப்பட்டிருக்கிறது. அதன்படி, சீதாபிராட்டியைத் துன்புறுத்திய காகத்தின் மீது, இராமபிரான் ஒரு புல்லே எடுத்து வீசியதும் அது பயங்கரவேகமுடைய பிரம்மாத்திரமாக மாறித் துரத்தியது. அம்பு துரத்தவும், காகம் ஓடியது. ஆனுல் காகத்தை விடாமல், அம்பு துரத்திக்கொண்டுவந்தது.

சயந்தன் தன்னேத் துரத்திவரும் அம்புக்குப் பயந்து, வழியில் காணும் ஒவ்வொருவரிடமும் அபயங்கேட்கிருன். இராமபிரான் விட்ட புல்லே எதிர்த்துத் தம்மால் நிற்கமுடியாதெென ஒதுங்கிவிடுகிருர்கள்.

மற்றவர்களெல்லாம் கைவிட, சயந்தன் பிரமலோகம் போகிருன். இவன் வரும் காரணத்தை முன்கூட்டியே தெரிந்துகொண்ட பிரமதேவன், "இங்கு ஏன் நீ வருகிருய்?" என்று மறுத்து அனுப்பி விடுகிருர்.

சயந்தன் கைலே மலேக்குப் பறந்து செல்லுகிருன். பின்னுல் அம்பு பறந்துவந்தபடி இருக்கிறது. சயந்தன் போனபொழுது சிவபெருமான் உமாதேவியாரோடு ஏகாந்தமாக அமர்ந்து குலவிக்கொண்டிருந்தார். காகமாகப் பறந்துவந்த சயந்தன் சிவபெருமான்முன் விழுந்து தனக்கு அபயம் அளிக்கும்படி வேண்டினுன். சிவபெருமான் அண்டங்களேயெல்லாம் அழித்துவிடும் ஆற்றல் படைத்தவர். ஆனுல் அவர்கூட இராமபிரான் விட்ட புல்லே எதிர்நின்று தாம் ஒன்றும் செய்யமுடியாதெனக் கூறிவிட்டார்.

(தொடரும்)

"உயிர் வாழ்வதற்காக!"

"நீ ஏன் உயிர்வாழவேண்டும்?"

"பின், என்னைச் செத்தா போகச்சொல்கி ர்கள்?"

இந்தக் கேள்விகளை அவளைக் கேட்டால், வள் கவனத்துடன் பதில்கள்கூடத் தந் ருக்கமாட்டாள். "ஏனைய்யா, உங்களுக்கு வற் வேலையில்லை!" என்று விரட்டியிருப் ள்.

அலைகள் வந்து மோதிக்கொண்டிருக்கின் ன. ஏன் அவ்வாறு மோதுகின்றன?

நட்சத்திரங்கள் வானில் மின்னிக்கொண் ருக்கின்றன! நட்சத்திரங்கள் ஏன் மின்னிக் காண்டிருக்கவேண்டும்?

தென்றல் மெதுவாக வீசுவதும், தேன் னிமையாக இருப்பதும், உலகில் நடக்கும் வ்வொன்றையும் ஏன் என்று கேட்டுக்கொண் ருந்தால், அவைகளுக்குச் சரியான விடை டைக்காது. ஆனாலும், சகுந்தலா கேட்ட ள்வி குலசேகரனின் காதுகளில் ஒலித்துக் காண்டிருந்தது.

மறுநாள் காலை குலசேகரன் கண்விழித்த பாழுது, முதலில் அவன் நினைவில் வந்தது தல் நாள் சகுந்தலா தன்னிடம் கேட்ட ள்விதான். மறுபடியும் அவனது மனம் குந்தலாவைச் சூழ்ந்துசென்றது. அவள் கட்ட கேள்வி, பார்த்த பார்வை அவனிடம் ாபத்தையும், இரக்கத்தையும் உண்டாக் ன. பாவம்! அவள் கணவனை இழந்தவள், க்குழந்தையுடன் இருந்தாள். பின் வாழ் ல் ஏற்பட்ட வெறுப்பால், தற்கொலை சய்ய முற்பட்டாள்.

அவளுக்கு வாழ்வில் ஏன் வெறுப்பு ஏற் ட்டது? காலையில் வந்த பத்திரிக்கையை வத்துக்கொண்டு, அவன் அந்தக் கேள்விக் ப் பதில் தேடிக்கொண்டிருந்தான். அவ டைய இளம் வயதில் அவள் ஏன் தற் காலைக்கு ஆயத்தமானாள்? இளம் வயது ன், ஆனால் கணவனையிழந்த விதவையா ற்றே? அவளுடைய வாழ்வில் காதல் றுக்கிட்டதோ?

சே! இருக்கவே இருக்காது! என்று குல சகரன் தலையையசைத்துக்கொண்டான்.

என் இருக்காது? அவளிடம் அழகு, ளமை, எல்லாம் இருக்கின்றன. அந்தப் ங்காவில் காதல் தென்றல் வீசாமலிருந் திருக்கமுடியுமா? குலசேகரன் ஒருபுறம் கேட்டுக்கொண்டான். இருக்காது, அவள் விதவையாயிற்றே! மறுபுறம் சமாதானம் வந்தது.

பூங்காவுக்கு வேலியிட்டிருக்கிறார்கள். ஆனால் அது தென்றல் வீசுவதைத் தடுத்துவிடமுடியுமா? அப்படியானால் சகுந்தலாவைக் காதலிப்பவன் யார்? குலசேகரனின் மனதில் கேள்வி மூண்டது.

வழக்கிற்கும் இதற்கும் என்ன சம்பந்தம்? ஏன் இந்தக் கேள்விகளையெல்லாம் கேட்டுக்கொண்டிருக்கவேண்டும்? என்று குலசேகரனுக்குப்பட்டது. எவ்வளவோ வழக்குகள் வருகின்றன. போகின்றன. அவைகளை ஆராய்ந்து வழக்காடுகிறார்கள். வழக்கு முடிந்ததும், அந்த ஆராய்ச்சி நின்றுவிடுகிறது. கவனம் மற்றொரு வழக்கின்மீது சென்றுவிடுகிறது. இந்த சகுந்தலா வழக்கும் இன்னும் இரண்டு வாரத்துக்குள் முடிந்துவிடும். வழக்கின் நுணுக்கங்களை மட்டும் கவனித்தால் போதும் என்று குலசேகரனுக்குத் தோன்றியது.

நோயாளியைப் பரிசோதிக்கும் டாக்டர் நோயின் தன்மையை மட்டும்தான் ஆராய்கிறார். ஆனாலும் நோயின் தன்மையைக் கேட்கும்போது, ஊரென்ன பெயரென்ன, என்று நோயாளியைப்பற்றிய மற்ற விவரங்களையும் ஓரளவுக்குத் தெரிந்துகொள்ளுகிறார்கள். வழக்கு என்றால், வழக்கு விபரங்களைத் தெரிந்துகொள்வதுடன், வழக்கில் சம்பந்தப்பட்டவர்களைப் பற்றியும் தெரிந்துகொள்ள வேண்டியிருக்கிறது.

குலசேகரனின் மனதில் ஏதோவொன்று "சகுந்தலா குற்றமெதுவும் செய்யவில்லை" என்று சொல்லிக்கொண்டிருந்தது. அவளுடைய களங்கமற்ற முகம், மென்மையான பார்வை, ஆடம்பரமற்ற அழகு, இவைகளுக்கும் குற்றத்துக்கும் துளியும் தொடர்பு இருக்கமுடியாது.

அன்று ஞாயிறு. விடுமுறை நாள். குலசேகரன் வீட்டினுள் அடைந்துகிடந்தான். மிகுந்த சஞ்சலத்துடன், பலவிதக் கேள்விகள், விதவிதமான பதில்கள், விவரிக்கமுடியாத குழப்பம் அவன் மனதில் அலைந்துகொண்டிருந்தன. புத்தகமொன்றை எடுத்துப் பார்த்தான். கண்கள் எழுத்துக்களை வாசித்தன. மனம் எதையும் ஏற்றுக்கொண்டதாகத் தெரியவில்லை. அரைமணிநேரமாகியும், முதற் பக்கத்தைவிட்டு இரண்டாம் பக்கம் போகவில்லை. அப்புறம்தான் நாம் புத்தகத்தைப்

“ உயிர் வாழ்வதற்காக!”

“ நீ ஏன் உயிர்வாழவேண்டும்?”

“ பின், என்னைச் செத்தா போகச்சொல்கி ர்கள்?”

இந்தக் கேள்விகளை அவளைக் கேட்டால், வள் கவனத்துடன் பதில்கள்கூடத் தந் ருக்கமாட்டாள். “ஏனய்யா, உங்களுக்கு வற் வேலையில்லை!” என்று விரட்டியிருப் ள்.

அலைகள் வந்து மோதிக்கொண்டிருக்கின் ன. ஏன் அவ்வாறு மோதுகின்றன?

நட்சத்திரங்கள் வானில் மின்னிக்கொண் ருக்கின்றன! நட்சத்திரங்கள் ஏன் மின்னிக் காண்டிருக்கவேண்டும்?

தென்றல் மெதுவாக வீசுவதும், தேன் னிமையாக இருப்பதும், உலகில் நடக்கும் வவொன்றையும் ஏன் என்று கேட்டுக்கொண் ருந்தால், அவைகளுக்குச் சரியான விடை டைக்காது. ஆனாலும், சகுந்தலா கேட்ட ள்வி குலசேகரனின் காதுகளில் ஒலித்துக் காண்டிருந்தது.

மறுநாள் காலை குலசேகரன் கண்விழித்த பாழுது, முதலில் அவன் நினைவில் வந்தது தல் நாள் சகுந்தலா தன்னிடம் கேட்ட ள்விதான். மறுபடியும் அவனது மனம் குந்தலாவைச் சூழ்ந்துசென்றது. அவள் கட்ட கேள்வி, பார்த்த பார்வை அவனிடம் ாபத்தையும், இரக்கத்தையும் உண்டாக் ன. பாவம்! அவள் கணவனை இழந்தவள், கைக்குழந்தையுடன் இருந்தாள். பின் வாழ் ல் ஏற்பட்ட வெறுப்பால், தற்கொலை சய்ய முற்பட்டாள்.

அவளுக்கு வாழ்வில் ஏன் வெறுப்பு ஏற் ட்டது? காலையில் வந்த பத்திரிக்கையை வத்துக்கொண்டு, அவன் அந்தக் கேள்விக் ப் பதில் தேடிக்கொண்டிருந்தான். அவ டைய இளம் வயதில் அவள் ஏன் தற் காலைக்கு ஆயத்தமானாள்? இளம் வயது ன், ஆனால் கணவனையிழந்த விதவையா ற்றே? அவளுடைய வாழ்வில் காதல் ருக்கிட்டதோ?

சே! இருக்கவே இருக்காது! என்று குல கரன் தலையயசைத்துக்கொண்டான்.

ஏன் இருக்காது? அவளிடம் அழகு, ளமை, எல்லாம் இருக்கின்றன. அந்தப் ங்காவில் காதல் தென்றல் வீசாமலிருந் திருக்கமுடியுமா? குலசேகரன் ஒருபுறம் கேட் டுக்கொண்டான். இருக்காது, அவள் விதவை யாயிற்றே! மறுபுறம் சமாதானம் வந்தது.

பூங்காவுக்கு வேலியிட்டிருக்கிறார்கள். ஆனால் அது தென்றல் வீசுவதைத் தடுத்து விடமுடியுமா? அப்படியானால் சகுந்தலாவைக் காதலிப்பவன் யார்? குலசேகரனின் மனதில் கேள்வி மூண்டது.

வழக்கிற்கும் இதற்கும் என்ன சம்பந்தம்? ஏன் இந்தக் கேள்விகளையெல்லாம் கேட்டுக் கொண்டிருக்கவேண்டும்? என்று குலசேகர னுக்குப்பட்டது. எவ்வளவோ வழக்குகள் வருகின்றன. போகின்றன. அவைகளை ஆராய்ந்து வழக்காடுகிறார்கள். வழக்கு முடிந் ததும், அந் ஆராய்ச்சி இன்றுவிடுகிறது. கவனம் மற்றொரு வழக்கின்மீது சென்றுவிடு கிறது. இந்த சகுந்தலா வழக்கும் இன்னும் இரண்டு வாரத்துக்குள் முடிந்துவிடும். வழக் கின் நுணுக்கங்களை மட்டும் கவனித்தால் போதும் என்று குலசேகரனுக்குத் தோன் றியது.

நோயாளியைப் பரிசோதிக்கும் டாக்டர் நோயின் தன்மையை மட்டும்தான் ஆராய் கிறார். ஆனாலும் நோயின் தன்மையைக் கேட்கும்போது, ஊரென்ன பெயரென்ன, என்று நோயாளியைப்பற்றிய மற்ற விவரங் களையும் ஓரளவுக்குத் தெரிந்துகொள்ளுகிறார் கள். வழக்கு என்றால், வழக்கு விபரங்களைத் தெரிந்துகொள்வதுடன், வழக்கில் சம்பந்தப் பட்டவர்களைப் பற்றியும் தெரிந்துகொள்ள வேண்டியிருக்கிறது.

குலசேகரனின் மனதில் ஏதோவொன்று “சகுந்தலா குற்றமெதுவும் செய்யவில்லை” என்று சொல்லிக்கொண்டிருந்தது. அவ ளுடைய களங்கமற்ற முகம், மென்மையான பார்வை, ஆடம்பரமற்ற அழகு, இவைகளுக் கும் குற்றத்துக்கும் துளியும் தொடர்பு இருக்கமுடியாது.

அன்று ஞாயிறு. விடுமுறை நாள். குலசே கரன் வீட்டினுள் அடைந்துகிடந்தான். மிகுந்த சஞ்சலத்துடன், பலவிதக் கேள்விகள், விதவிதமான பதில்கள், விவரிக்கமுடியாத குழப்பம் அவன் மனதில் அலைந்துகொண் டிருந்தன. புத்தகமொன்றை எடுத்துப் பார்த் தான். கண்கள் எழுத்துக்களை வாசித்தன. மனம் எதையும் ஏற்றுக்கொண்டதாகத் தெரி யவில்லை. அரைமணிநேரமாகியும், முதற் பக்கத்தைவிட்டு இரண்டாம் பக்கம் போக வில்லை. அப்புறம்தான் நாம் புத்தகத்தைப்

படிக்காமலிருக்கிறோம் என்ற எண்ணம் வந்தது. புத்தகத்தைப் போட்டுவிட்டுப் படுத்தான். எப்படி நேரத்தைப் போக்குவதென்று தெரியவில்லை. விடுமுறையில்லாமல், வேலை நாளாக இருந்தால், வேலை செய்வதில் நேரம் போய்விடும்.

"இன்னும் குளிக்கவில்லையா? வெந்நீர் ஆறிப்போகிறது. சீக்கிரம் குளித்துவிட்டு வா? மணி ஒன்று ஆகிவிட்டது. சாப்பிடலாம்" என்று அஞ்சலையம்மாள் அழைத்தார்கள்.

"இப்பொழுது குளிக்கவில்லை! ஐந்து மணிக்குக் குளித்துவிடுகிறேன். இப்பொழுது சாப்பிடுகிறேன்," என்று குலசேகரன். படுக்கையை விட்டு எழுந்துவந்தான்.

"ஏன், தலைவலிக்கிறதா? உடம்புக்கு ஏதாவதா?" என்று அஞ்சலையம்மாள் கேட்டார்கள்.

"அதெல்லாம் ஒன்றுமில்லை. பசிக்கிறது. சாப்பிட்டுவிடலாம் என்று வருகிறேன்."

சாப்பாடு வேலை முடிந்ததும், மறுபடியும் என்ன செய்வதென்று குலசேகரனுக்குப் புரியவில்லை. பத்திரிக்கையை எடுத்து, அதில் முதல் பக்கத்தில் உள்ள விளம்பரங்களையெல்லாம் ஒன்றுவிடாமல் படித்தான். அப்படியும் பொழுது போகவில்லை. பிறகு காலையில் படிக்காது கீழே போட்ட புத்தகத்தை எடுத்தான். அந்தப் புத்தகத்தின், முதல்பக்கத்தின் ஆரம்ப எழுத்து பூவேலைகள் செய்யப்பட்டு இருந்தது. வெகுநேரம் அந்தப் பூவேலைப் பாட்டைப் பார்த்துக்கொண்டிருந்தான். பின் ஒவ்வொரு வரியிலும் எவ்வளவு எழுத்துக்கள் இருக்கின்றன என்று எண்ண ஆரம்பித்தான். முதல் வரியில் 39 எழுத்துக்கள் இருந்தன. இரண்டாவது வரியில் 42 எழுத்துக்கள் வந்தன. ஐந்தாவது வரியில் 48 எழுத்துக்கள் அடைந்திருந்தன. முதல் பக்கத்தை இப்படி எண்ணி முடித்ததும், "சே! இது என்ன வேலை!" என்று புத்தகத்தை மடக்கி வைத்தான்.

மணி மூன்றடித்தது. குலசேகரனின் கவனம் கடிகாரத்தின்மீது சென்றது. இதுவரை எதுவுமே கேட்காதிருந்த கடிகாரத்தின் சத்தம், இப்பொழுது நன்றாகக் கேட்டது. டிக் டிக், டிக் டிக் என்று அது தொடர்ந்து அடித்துக்கொண்டிருந்தது. அவ்வாறு அடிப்பதைக் குலசேகரன் எண்ண ஆரம்பித்தான். நானூறு எண்ணி முடித்ததும், அதுவும் அவனுக்கு அலுப்பாகப்பட்டது. கீழே போய், குளித்துவிட்டு, வேறு உடைகளை மாற் கொண்டு வெளிக்கிளம்பினான்.

"எங்கே போகிறாய்?" என்று அவ அத்தை கேட்டார்கள்.

"எங்கேயுமில்லை!" என்று செருப் மாட்டிக்கொண்டு வெளிவந்தான்.

"காரை எடுத்துக்கொண்டு போகவி லையா?"

"வேண்டாம்! நான் உலாவி வரப்போ றேன்,"

தெருவிற்கு வந்ததும், வெய்யலின் கடு தெரிந்தது. அவனுடைய வீட்டருகில் நின் மின்சாரக் கம்பத்தின் நிழல் அவன் காலடியி விழுந்தது. கம்பத்தின்மேல் 7/8 என்று இல கம் போடப்பட்டிருந்தது. அந்தத் தெருவி எவ்வளவு கம்பங்கள் நாட்டப்பட்டிருக்கின்ற என்று எண்ணிக்கொண்டே நடக்க ஆரம்பி தான். அந்தத் தெரு முடிந்ததும், மறுதெ ஆரம்பித்தது. கம்பங்கள் ஒவ்வொன்று கடந்து சென்றன. இதற்குமுன் அவ அறிந்திராத அளவு கம்பங்கள் ஒவ்வொ தெருவிலும் இருந்தன. சிலதெருக்களி நடமாடும் மனிதர்களைவிட, அங்கு நடப்ப டிருக்கும் கம்பங்கள் அதிகமாக இருந்தன. ஒ தெரு முனை வந்ததும், நாலைந்து கம்பங்க அடுத்தடுத்து இருக்கும். பின் தூரம் அதி மாகி, கம்பங்கள் எட்டி நின்றன.

குலசேகரன் நடந்துகொண்டிருந்தான். க பங்கள் கடந்துகொண்டிருந்தன. எவ்வள தூரம் நடந்தோம், எவ்வள நேரமாக நட கொண்டிருக்கிறோம் என்று அவனுக் தெரியாது. கடைசியில் அவன் ஓரிடத்தி தாமதித்து நின்றான். அவனுக்கே ஆச்ச மாக இருந்தது, எப்படி இவ்வளவுதூ வந்தோமென்று, அவன் நின்றுகொண்டி தது, டாக்டர் சஞ்சீவியின் பங்களாவின்மு

தோட்டக் கதவைத் திறந்துகொண்டு கு சேகரன் உள் சென்றான். வெளிப்புறத் ஒருவரையுங் காணோம். ஹாலில் வேலைக்கார உட்கார்ந்திருந்தான்.

"டாக்டர் இருக்கிறாரா?"

"இல்லைங்க, அவர் வெளியே போய் டார். காலை எட்டுமணிக்குள் வந்தால் பார் லாம். அதற்கப்புறம் ஆஸ்பத்திரியில் பா கலாம்" விடாமல் வேலைக்காரன் சொன்ன வேறு கேள்விகளை எதிர்பார்க்காமல்.

வழக்கமாக, விடுமுறைநாள் மாலை டாக்டரை வீட்டில் பார்க்கமுடியாது. குலசேகரனும் எதிர்பார்க்கவில்லை. பதில் சொல்லியதும், வேலைக்காரன் தன் வேலையைப் பார்த்துக் கொண்டிருந்தான். குலசேகரன் தயங்கியபடி நின்றான்.

"வேறு ஏதாவது சொல்லவேண்டுமா. ஐயா!" என்று வேலைக்காரன் கேட்டான்.

"இல்லை, ஒன்றுமில்லை!" என்று குலசேகரன் திரும்பி வெளிவந்தான்.

வேறு எங்கு போவது என்று அவன் சற்று யோசித்தான். நான்கு மைல்களுக்கு மேல் நடந்திருக்கவேண்டும். கால்களும் வலியெடுத்தன. தோட்டத்தில் முன் பாதையில் இரு பக்கத்திலும் சவுக்கு அடர்த்தியாக வளர்ந்து, சுவர்போல வெட்டிவிடப்பட்டிருந்தது. ஒரு பக்கத்தில் சிறிய பிளவு ஒன்றிருந்தது. குலசேகரன் அதன்வழி நுழைந்து, புல் வளர்க்கப்பட்ட பகுதிக்குள் வந்தான். அந்த இடம் மிக அமைதியாகவும், அருகே வந்து அமரும்படி அழைப்பதாகவும் இருந்தது. காலிலிருந்த செருப்பைத் தள்ளிவிட்டு, புல்தரையில் குலசேகரன் உட்காரப்போனான். திடீரென்று அருகிலுள்ள மரத்தின்கீழ் இடப்பட்ட பலகையில் சகுந்தலா உட்கார்ந்திருப்பது அவனுக்குத் தெரிந்தது! உட்காரப்போனவன் மீண்டும் எழுந்து, மரத்தின்பக்கம் போனான்.

குலசேகரன் வந்ததை அவள் கவனிக்கவில்லை, தரையைப் பார்த்தபடி, நெற்றியில் கைவைத்துக்கொண்டு, அவள் தலைகுனிந்து உட்கார்ந்திருந்தாள். அவளுக்குப் பின்புறம் சவுக்கு வரிசை 'உஸ்' 'உஸ்' என்று காற்றில் சத்தமிட்டுக்கொண்டிருந்தது. அவள் அமைதியாக உட்கார்ந்திருப்பதைக் கெடுக்க வேண்டாமென்று அவனுக்குத் தோன்றியது. திரும்பிப் போகலாமென்று அடியெடுத்து வைத்தான். சகுந்தலா செறுமுகின்ற சத்தம் கேட்டது. அவள் தனியாக அமர்ந்து, அழுது கொண்டிருக்கிறாள். அந்த வேதனைக்காட்சி, அவன் நெஞ்சை யறுப்பதுபோலிருந்தது. பக்கத்தில் போய் நின்று அவளைக் கூப்பிடத் தத்தளித்தான். எப்படிக் கூப்பிடுவதென்று தெரியவில்லை. கடைசியாகத் தனக்குள்ள தைரியம் பூராவையும் வரவழைத்துக்கொண்டு, "சகுந்தலா!" என்று குழறிக்கொட்டினான். சகுந்தலா பேசாமல் உட்கார்ந்திருந்தாள், குலசேகரன் சொன்னது அவள் காதில் விழவில்லை.

குலசேகரன் மறுபடியும், "சகுந்தலா! சகுந்தலா!" என்று கூப்பிட்டான். சகுந்தலா திடுக்கிட்டுத், திரும்பிப்பார்த்தாள். சகுந்தலாவின் கண்களில் நீர் ததும்பிக்கொண்டிருந்தது, அவள் முகத்தில் காணப்பட்ட சோகம், குலசேகரன் உள்ளத்தில் தாங்கமுடியாத வேதனையை உண்டாக்கியது, மறுகணம் அவளருகில் உட்கார்ந்தான். சகுந்தலா அவன் தோள்மீது முகத்தை வைத்துப் புலம்பினாள். அவளுடைய கண்களிலிருந்து வடியும் கண்ணீர் அவன் சட்டைமேல் விழுந்தது. குலசேகரன் சகுந்தலாவின் கண்களைத் துடைத்த வண்ணம் இருந்தான்.

சவுக்கு வரிசையின் மறுபக்கத்தில் யாரோ நடந்து வருவதுபோன்ற சத்தம் கேட்டது. சகுந்தலா திடுக்கிட்டு உட்கார்ந்து சுற்றிலும் பார்த்தாள். இருள் சூழ ஆரம்பித்துவிட்டது, மரங்களில் சலசலப்பு இருந்தது. அருகே குலசேகரன் உட்கார்ந்திருப்பதைக் கண்டாள். கையை விடுவித்துக்கொண்டு எழுந்தாள்.

"சகுந்தலா!" என்று மெதுவாகக் கூப்பிட்டான் குலசேகரன்.

"இல்லை, இல்லை!" என்று வேகமாக அந்த இடத்தைவிட்டு, சகுந்தலா ஓடிவிட்டாள்.

குலசேகரன் நெடுநேரம் அந்த இடத்திலேயே உட்கார்ந்திருந்தான். வானத்தில் இருளின் மத்தியில் நட்சத்திரங்கள் மின்னின. முதல் நாள் கடற்கரையில் நட்சத்திரங்களைப் பார்த்துக்கொண்டு இருந்தது கவனத்துக்கு வந்தது. அதே நட்சத்திரங்கள்தாம் இன்றும் மின்னுமின்றன. ஆனால் எவ்வளவு மாறுதல்! எவ்வளவு அழகுடன், அவை ஒளிவீசுகின்றன!

குலசேகரன் வீடு திரும்பும்பொழுது நெடுநேரமாகிவிட்டது. அவன் வரும்வரை, அத்தை அஞ்சலையம்மாள் காத்துக்கொண்டிருந்தார்கள்.

"இவ்வளவு நேரமாக எங்கு போயிருந்தாய்? சாப்பாடு ஆறிவிட்டது."

"சாப்பாடு வேண்டாம்!"

"வேறு எங்கேயாவது சாப்பிட்டாயா?"

"இல்லை."

"பின்?"

"பசியில்லை."

தூக்கத்தில் நடப்பவனைப்போல, குலசேகரன் நடந்து தனது அறைக்குள் போனான்.

கடிகாரம் மணி 2 அடித்துவிட்டு, டிக் டிக் என்று தொடர்ந்து போய்க்கொண்டிருந்தது. குலசேகரனின் கண்கள் மூடாமல் இருந்தன. "நான் அவளைக் காதலிக்கிறேன்! நான் அவளைக் காதலிக்கிறேன்!!" என்று தனக்குள் அவன் சொல்லிக்கொண்டான்.

(தொடரும்)

பால் கொடுக்கும் பலன்

பால் பழம்பெருங் காலந்தொட்டே மனித சமுதாயத்தின் முக்கியமான உணவாக மட்டுமல்லாமல் முதன்மையான உணவாகவும் இருந்துவருகிறது. ஒவ்வொருவரும தாயின் வயிற்றிலிருந்து வெளித் தோன்றியவுடன் உட்கொள்வது முதல் உணவு பால்தான். வாலில்லாக் குரங்கு நிலையிலிருந்து மனித நிலைக்கு மாறிய முதல் மனிதன் எளிதாகப் பெற்றுக்கொள்ள முயற்சித்த முதல் உயர்ந்த உணவு பாலேயாகும். உயிர் வாழ்க்கைக் கேற்ற உணவுச்சத்து முழுவதையும் உள்ளடக்கிக்கொண்டிருக்கும் ஒரு பெரும் உணவுப் பொருள் பாலேயாகும் என்பதை, உலகில், எல்லா நாட்டிலும், எல்லாக் காலத்திலும், எல்லோரும் நன்கு அறிந்துகொண்டு, அதனை உட்கொண்டுவந்திருக்கின்றனர்.

உயிரினத்திடமிருந்து இயற்கையாய் நமக்குக் கிடைக்கும் உணவுப்பொருள் பால் ஒன்றுதான். விலங்கு—பறவை இனங்களின் இறைச்சியோ அல்லது முட்டைகளோ நமக்கு இயற்கை விதிப்படி ஏற்பட்ட உணவுப் பொருள்கள் ஆகா. பால் ஒன்றுதான் இயற்கைவிதிப்படி உயிரினத்திடமிருந்து வந்த மனிதனுக்கான உணவுப்பொருள் ஆகும். உடல் நலத்திற்கும், உடல் உறுதிக்கும், உடல் வளர்ச்சிக்கும் ஏற்ற உணவாக அவனிமுழுவதும் ஏற்றுப் போற்றிக்கொள்ளப்பட்ட உணவுப் பொருள் பால் என்றால் மிகையாகாது.

பால், உணவுப்பொருள் எல்லாவற்றிலும் மிகச்சிறந்த அரும்பெரும் உணவாகக் கொள்ளப்படுவதற்கு, அதனிடத்தே பொதிந்து கிடக்கும் அரிய உட்கருத்து என்னவென்றால், அதனிடத்திலுள்ள கொழுப்பு மற்றெல்லாப் பொருள்களிடத்தும் காணப்படும் கொழுப்பைக் காட்டிலும் எளிதில் செரிக்கக்கூடியதாகும். அதைத்தவிர அதனிடத்தே இயற்கையாகவே இயற்கை விதிப்படி அமைந்த சர்க்கரை, புரொட்டீன், ஏ—பி$_1$—பி2—சி—டி (A—B1—B2—C—D) வைட்டமின்கள், சுண்ணம்பு, பிறகனிகள் ஆகியவைகள் தேவைக்கேற்றவகையில் வளமாக இருக்கின்றன. ஒரு குவளைப் பால் இரைப் பையிலே கிடந்து செரிக்க ஒரு மணி நேரந்தான் பிடிக்கும்; ஆனால் அதே அளவு ரொட்டி செரிக்க 2½ மணி நேரமும், இறைச்சி செரிக்க 3½ மணி நேரமும் பிடிக்கின்றன. பாலை எப்படிக் குடிப்பது என்பதைப் பொறுத்து மாறுபட்ட கருத்துக்கள் நிலவியபோதிலும். அதனை மெல்ல மெல்லச் சப்பிச்சப்பிச் சாப்பிடுவதைக் காட்டிலும் சீராகக் கடகடவென்று குடிப்பது பெரும்பாலோர்க்கு நலம் பயப்பதாகும். மூச்சு தாங்கமுடியாத குழந்தைகள் வேண்டுமானால் மெல்ல மெல்லச் சப்பிச் சாப்பிட வேண்டியிருக்கக்கூடும். அதனைக் கடகட என்று சாப்பிடுவதன்மூலம் மிக விரைவில் செரிக்கவைக்க வழி ஏற்படுகிறது. மெல்லச் சாப்பிடுவதால் இரைப்பையில் பெரும் அளவுக்குத் தயிர்க் கட்டிகள் உருவாகி, அவைகள் செரிமானத்தைக் காலந்தாழ்க்கும்படி செய்துவிடுகின்றன. பால் எவ்வளவுக்கெவ்வளவு விரைவாகச் செரிமானம் ஆகிறதோ, அவ்வளவுக் கவ்வளவு விரைவாகப் பசியும் ஏற்பட்டுவிடக்கூடும். எவ்வளவுக் கெவ்வளவு காலந்தாழ்ந்து செரிமானம் ஆகிறதோ, அவ்வளவுக்கவ்வளவு பசியும் காலந்தாழ்ந்து ஏற்படக்கூடும். எனவே விரைவாகச் செரிக்கவேண்டாம் என்று கருதுபவர்கள் பாலைச் சப்பிச்சப்பியும், விரைவாகச் செரிக்கவேண்டும என்று கருதுபவர்கள் பாலைக் கடகடவென்றும் குடிக்கப் பழகிக் கொள்ளவேண்டும்.

பாலின் அருமை பெருமைகளெல்லாம் எல்லோராலும் பாடப்பட்டும், போற்றிப் புகழப்பட்டும் வந்தபோதிலுங்கூட, சிலரைப் பொறுத்து அது விதிவிலக்காக அமைந்து விடவும் செய்கிறது. அமெரிக்காவில் ராக்செஸ்டர் என்னுமிடத்திலுள்ள மேயோ கிளினிக் (Mayo clinic, Rochester, U. S. A) ஆராய்ச்சி செய்து பால் சிலருக்கு ஆகாத உணவாக ஆகிவிடுகிறது என்று கண்டுபிடித்திருக்கிறது. அமெரிக்காவைப் பொறுத்தவரையில் ஒவ்வொரு ஐந்துபேர்களிலேயும் ஒருவருக்கு பால் எளிதில் செரிமானமாகமுடியாத உணவாகவும், ஒவ்வொரு பதினைந்துபேர்களிலேயும் ஒருவருக்கு அது நஞ்சாகவும் அமைந்து விடுகின்றதாம்.

உலகம் முழுவதும், பால் என்னும்போது அது பசும்பாலைத்தான் குறிக்கும் மனிதன் சாப்பிடப் பழகியிருக்கும் பல்வேறுவகை

பால்களைக் காட்டிலும், பசும்பால், கொழுப்புச் சத்து மிகவாக உடையது என்று கூறமுடியாவிட்டாலும், மனிதனுக்குத் தேவையான அளவு கொழுப்புச் சத்து, பசும்பாலில் இருக்கிறது என்றே கூறவேண்டும். பொதுவாகப் பசுவின் பாலை எடுத்துக்கொண்டால், அதன் ஒரு காலன் எடை சுமார் 10·32 பவுண்டு இருக்கும். ஒரே காலன் பாலில் 144 அவுன்சு (16 அவுன்சு ஒரு பவுண்டு) தண்ணீரும், 6 அவுன்சுக் கொழுப்பும், 6 அவுன்சுப் புரோட்டீனும், $7\frac{3}{4}$ அவுன்சு சர்க்கரையும், $1\frac{1}{4}$ அவுன்சு கனிப்பொருள்களும் கலந்திருக்கின்றன.

பாலிலே கலந்திருக்கும் கொழுப்புச் சத்துக்களைப் பற்றி ஆராய்ச்சி நடத்தினால் வியப்புக்குரிய பல்வேறு உண்மைகள் வெளிப்படும். பசுவின்பாலைக் காட்டிலும் வெள்ளாட்டுப் பாலில், கொழுப்பு நூற்றுக்கு ஐம்பதிலிருந்து நூறு விழுக்காடு அதாவது அரைப்பங்கிலிருந்து ஒரு முழுப்பங்கு மிகவாகக் கலந்திருக்கிறது. செம்மறியாட்டுப் பாலில் மேலும் நூற்றுக்கு ஆறு விழுக்காடு கொழுப்புச்சத்து மிகவாகக் கலந்திருக்கிறது. செம்மறியாட்டுப் பால் அருந்தும் பழக்கம் உலகின் பல பகுதிகளில் இருந்துவருகிறது. மான்களின் பாலிலும், கழுதைகளின் பாலிலும் கொழுப்பு மிக மிகக் குறைவாக இருக்கிறது; பசும்பாலில் இருப்பதில் நூற்றுக்கு இரண்டு விழுக்காட்டிற்கும் குறைவாகத்தான் இருக்கிறது. ஆனால் இந்தப் பால்களில் சில நோய்களைப் போக்குவதற்கும், குழந்தைகளின் நலிவை நீக்குவதற்கும் ஆன மருந்துச் சத்துகள் அடங்கியிருக்கின்றன. வேல் என்ற ஒருவகைக் கடல் உயிரி (பிராணி)யின் பாலில்தான் மிகவான கொழுப்பு இருக்கிறது. பசும்பாலிலுள்ள கொழுப்பைக் காட்டிலும் ஆறு மடங்கிலிருந்து இருபது மடங்கு வரையிலும் மிகவான கொழுப்பு வேலின் பாலில் காணப்படுகிறது. வேலின் பாலில் சர்க்கரைச் சத்து சிறிதும் இல்லை; ஆனால் புரோட்டீன் பசும்பாலிலிருப்பதைக் காட்டிலும் இரண்டிலிருந்து மூன்று மடங்கு மிகவாகத் தென்படுகிறது, வேலின் பால் எண்ணெய்ப் பசையுடையதாகவும், மஞ்சள்நிறமுடையதாகவும் இழிக்கும்.

83 வகை உயிரினங்களின் பால்களை ஆராய்ந்தறிந்து பார்த்ததில் மனித இனத்தின் பால்தான் மிக வியப்புக்குரிய தன்மைகளைக் கொண்டனவாக இருக்கின்றது என்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. மூளை வளர்ச்சிக்கான கிளர்ச்சியூட்டும் சத்துக்கள் மனித இனத்தின் பாலில்தான் தேங்கிக்கிடக்கின்றன.

மேலை நாடுகளில் மிக அண்மைக்காலம் வரையில் வெள்ளாட்டின்பால் ஒதுக்கப்பட்ட ஒன்றாகவே கருதப்பட்டு வந்தது. அதனால் ஏற்படும் நன்மைகளை இப்பொழுதுதான் சிறிதளவு உணரத்தலைப்பட்டுப், பயன்படுத்த முற்பட்டுள்ளனர், 1952—53-ஆம் ஆண்டில் எடுக்கப்பட்ட கணக்குப்படி, உலகம் முழுவதும் உள்ள மக்கள் அருந்தும் பாலில், நூற்றுக்கு 65 விழுக்காடு வெள்ளாடு தரும்பாலாகும். வெள்ளாட்டின் பால் ,பசுவின் பாலைக் காட்டிலும் கொழுப்பு, புரொட்டீன் ஆகியவைகளில் மிகுதியான அளவினைக் கொண்டிருப்பதோடுமட்டுமல்லாமல், எளிதாகச் செரிக்கக் கூடியதாகவும், குறைந்த செலவில் பெறக் கூடியதாகவும் இருக்கிறது. ஒரு நல்ல பசுவையும் நல்ல வெள்ளாட்டையும் எடுத்துக் கொண்டால், வெள்ளாடு தன் எடை அளவு பாலைப் பத்து நாட்களில் கொடுக்கிறது; ஆனால் பசு தன் எடை அளவு பாலைக் கொடுக்கப் பன்னிரண்டு நாட்கள் பிடிக்கின்றன. அது மட்டுமல்லாமல், வெள்ளாடு கொடுப்பது போன்று மூன்று மடங்கு பாலைப் பசுவினிடம் பெறவேண்டுமானால், வெள்ளாட்டிற்குவைப்பதுபோன்று ஐந்துமடங்கு தீனி வைக்க வேண்டியிருக்கிறது. மேலும் வெள்ளாட்டுப் பால் தீய கிருமிகள் அணுக இயலாத தன்மையைக்கொண்டிருக்கிறது. தாய் உயிரிகளிடமிருந்து குழந்தை உயிரிகள், பாலைச் சப்பிச் சாப்பிடுவதால், அத்தகைய பால், எத்தகைய கேட்டிற்கும், காற்றில் மிதக்கும் எத்தகைய தீய கிருமிகளின் நுழைவிற்கும் இடங்கொடுக்காத வகையில் தூய தன்மை படைத்ததாக இருக்கிறது.

பால் கெட்டுப்போகாமலும், அதனிடத்தில் தீய கிருமிகள் அணுகாவண்ணமும் பல நாட்கள்வரையில் பாதுகாத்துக்கொள்ளும் அறிவியல் முறைகள் பல, இக்காலத்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. பாலைத் தூளாக ஆக்கிப் பயன்படுத்தும் முறை பன்னெடுங் காலமாகவே இருந்துவருகிறது. நாடுவிட்டு நாடு நாடோடிகளாகத் திரிந்துகொண்டிருந்த மங்கோலியர்கள், காய்ந்த பால்தூளைத் தோற்பைகளில் அடைத்துக்கொண்டு சென்று, வழிப்பயணத்தில் பயன்படுத்திக்கொண்டனர் என்ற குறிப்பை **மார்க்கோ போலோ** என்ற சுற்றுப்பயண வரலாற்றாசிரியர் எழுதியுள்ளார்.

பாலினால் பெறப்படும் பலன்கள் பலப்பல; உடலுக்கு வேண்டிய எல்லாச் சத்துக்களும் அதனுள் அடங்கியுள்ளன. குழந்தைகளின் முதல் உணவும் முக்கிய உணவும் அதுதான்; அது உடலை வளர்க்கிறது; உறுதியைப் பயக்கிறது, உவகையை அளிக்கிறது; வயது முதிர்ந்தவர்களைக் காப்பாற்றுகிறது; உணவுகளிலெல்லாம் உயர்ந்ததொரு உணவாக விளங்குகிறது!

தேனீக்களின் மொழி

டாக்டர் காரல் வான் பிரிச்(Dr. Karl Von Prisch) என்ற ஆச்த்திரியா நாட்டு அறிஞர் "தேனீக்களின் மொழி" பற்றி ஒரு ஆராய்ச்சி நடத்தி தேனீக்களிடை ஒரு நிகழ்ச்சி பரவுவதற்கு நறுமணவாடை முக்கிய காரணமாகி, ஒரு மொழிக்குரிய பண்பைப் பெறுகின்றது. சில கருத்துக்களை வெளிப்படுத்தத் தேனீக்கள் தேன்கூட்டில், அதற்குரிய சிலபல ஆட்டங்களை மேற்கொள்கின்றன என்ற முடிவை வெளியிட்டுள்ளார்.

இந்த உண்மையைத் தேன்கூடு இருக்கும் இடத்திற்கருகில் தேன் நிறைந்த கோப்பைகளை வைத்து அறிந்துகொள்ளலாம். இந்தக் கோப்பைகள மணிக்கணக்கில், நாட்கணக்கிலுங்கூட கவனிக்கப்படாமல் இருக்கலாம். எப்பொழுதாவது ஒரு தேனீ கோப்பையைக்காண நேரிட்டால், தேனை எடுத்துக் கொண்டு கூட்டிற்குத் திரும்பும். உடன் கோப்பையை நோக்கி வரும் தேனீக்களின் எண்ணிக்கை அதிகரிக்கும். இவையெல்லாம் அந்த ஒரு கூட்டில் வாழ்பவைதான். தேன் நிறைந்த கோப்பைகள் பல இருந்தால் புதிதாக வரும் தேனீக்கள் பலவாகப் பிரிந்து எல்லாக் கோப்பைகளையும் படையெடுக்கும். இதிலிருந்து தேனை முதலில் கண்டுபிடித்த தேனீயைத்தொடராமல். மற்ற தேனீக்கள் அதன தன் சொந்த முயற்சியாலேயே தேன் எடுக்க முனைகின்றன என்பது விளங்கும்.

வான் பிரிச், தேனீக்களை கண்ணாடிக் கூடுகளில் வைத்து ஆராய்ச்சி நடத்தியதில் விந்தையான சில பண்புகளைத் தேனீக்களிடம் கண்டார். புதிய தேனுடன் கூட்டிற்குத் திரும்பிய ஒரு தேனீ கூட்டின் ஒரு வரிசையில் நுழைந்து தான் கொணர்ந்த மதுவில் ஒரு பகுதியை மற்றொரு தேனீக்குக் கொடுத்துவிட்டு, இடதும் வலதுமாக மாறிமாறி, சுற்றிச்சுற்றி வரும் ஒருவிதமான ஆட்டத்தை மேற்கொண்டது. ஒவ்வொன்றாக சேர ஆரம்பித்து, வெகு விரைவில் எல்லா தேனீக்களும் பங்குகொண்டு ஆட ஆரம்பித்தன.

"தேன், கூட்டிற்கு அருகில் காணப்படுகிறது" என்பதையே இந்த ஆட்டங்கள்குறிக்கின்றன என்று வான் பிரிச் விளக்குகிறார். முதலில் ஆடிய தேனீயைத்தொடர்ந்து சில தேனீக்கள் பறந்து செல்கின்றன. அவைகளும் தேன் கொண்டுவந்தால் அந்த ஆட்டத்தை ஆடத் தொடங்குகின்றன. இதைத் தொடர்ந்து இன்னும் பல தேனீக்கள் வெளிச்செல்லுகின்றன. வெகு விரைவில் அந்தத் தேன்கூடே ஒரு நாட்டிய அரங்காக மாறிவிடுகிறது.

தேனீக்கள் தேன்குடிக்கப் பொதுவாகக் கண்ணாடிக் கோப்பைகளை விடுத்து மலர்களைத்தான் நாடும். வான் பிரிச் ஆராய்ச்சியை மாற்றினார். தேன்கூட்டிற்கருகில் **பிளாக்** (Phlox) என்ற செடிகளை அமைத்து. மலர்களில் சர்க்கரை நீரை நிரப்பிவைத்தார். குறியிடப்பெற்ற தேனீக்கள் சர்க்கரை நீரை எடுத்துக்கொண்டுக் கூட்டிற்குத் திரும்பி ஆட்டங்களில் இறங்கின. குறியிடப்படாத தேனீக்கள் ஆராய்ச்சிக்கு இடையூறாக இராமல் இருக்க. கூட்டிற்குத் திரும்பாதவாறு தடுக்கப்பட்டன. வான் பிரிச் உடன் பிறிதொரு இடத்தில் பிளாக் செடித்தொட்டி ஒன்றையும். **சிக்லாமென்** (Cyclamen) என்ற வேறுவகைச் செடித்தொட்டி ஒன்றையும் வைத்து இரண்டு செடியிலுள்ள மலர்களிலும் சர்க்கரை நீரை ஊற்றாமல் வைத்திருந்தார்.

குறியிடப்படாத சில புதிய தேனீக்கள் கூட்டிலிருந்துகிளம்பி இரண்டாவது பிளாக்தொட்டியை வந்தடைந்தன. தேனீக்கள் மலர்களில். அமர்ந்து ஆராய்ந்தன. தேன் எடுக்க இயலாத அளவுக்கு ஆழத்தில் இருந்தாலும் தேனீக்கள் முயற்சியை விடுவதாயில்லை. ஆனால் பக்கத்திலிருந்த சிக்லாமென் மலர்களை தேனீக்கள் கவனிக்காமலேயே இருந்தன. ஆராய்ச்சியைமாற்றி பிளாக் செடிக்குப் பதிலாக சிக்லாமென் செடியை வைத்துப் பார்த்ததில் பிளாக் மலர்கள் கவனிக்கப்படாமலேயே இருந்தன.

இதிலிருந்து வான் பிரிச் கண்ட உண்மை, தேனீக்கள் மலரை நெருங்குவதின் காரணம் மலரின் மணமேயன்றி மலரிலுள்ள மதுவல்ல. என்பதேயாகும். மலரின் மணம், தேனீக்களுடன் ஒட்டிக்கொண்டு அவை கூடு திரும்பியபோது மற்ற தேனீக்களால் நுகரப்பட்டு, அந்த மணமுள்ள மலரைநாடி மற்ற தேனீக்களும் வெளிக்கிளம்புகின்றன, ஆகவே தேனீக்களின் மொழி நறுமணங்களின் மொழியாகும்.

இதை மெய்ப்பிக்க அவர் மற்றொரு ஆராய்ச்சியையும் மேற்கொண்டார். இதில் மலர்களை ஒதுக்கிவிட்டு நறுமணம் தரவல்ல வெவ்வேறுவகைச் சாறுகொண்ட கோப்பைகளை உபயோகித்தார். பின் குறியிடப்பெற்ற சில தேனீக்களை இனிப்புப்பண்டம் கரைத்த சாற்றை உண்ணவைத்தார். இதை அடுத்து வழக்கமாக தேன்கூட்டில் நிகழும் ஆர்ப்பாட்டங்கள் நடைபெற்றன. அறிவிக்கப்பட்டத் தேனீக்கள் அந்த இனிப்புப் பண்ட வாடைவீசும் இடங்கள்நோக்கிப் பறந்தன. அது மலராக இருந்தாலும் வேறெந்தப் பொருளாக இருந்தாலும் அங்கே அந்த வாடையை நுகர்ந்து உட்கார்ந்தன.

வான் பிரிச்சின் இந்த மொழியாராய்ச்சி உறுதிப்பெற்றது. இந்த முடிவு ஒரு நன்மையையும் அளிக்க உதவிற்று. மது அதிகம் சுரக்கக்கூடிய மலர்களையே நறுமணமொழி உதவிகொண்டு தேனீக்கள் நாடும் வண்ணம், செய்யலாம். அப்போது அம்மலர்களில், தேனீக்களின் உதவியால் மகரந்தச் சேர்க்கை அதிகமாக ஏற்பட்டு, செடிகளின் வளர்ச்சி பெருகி மலர்கள் அதிகமாக மலரும். ஆகவே தேன் உற்பத்தியும் அதிகரிக்கும்.

வினாவும் விளக்கமும்

திராவிடக் கழகத்தையும் திராவிட முன்னேற்றக் கழகத்தையும் ஒரே அமைப்பின் கீழ்க் கொண்டுவர வேண்டும் என்ற எண்ணத்தில், சில சட்டமன்ற உறுப்பினர்கள் முயற்சி செய்கிறார்களே, அந்த முயற்சிக்குத் திராவிட முன்னேற்றக் கழகம் இசைந்துவருமா ?

திராவிட கழகமும் திராவிட முன்னேற்றக் கழகமும் இதுகாறும் பிரிந்து இருப்பதற்குக் காரணம், இப்படிப்பட்ட நடுநிலை முயற்சியாளர்கள் யாரும் இல்லாமல் போய்விட்டார்கள் என்பதல்ல. நடுநிலை முயற்சிக்கு உள்ளடங்கி வராத நிலைமையே காரணமாகும் என்பதை முதலில் உணர்தல் வேண்டும்.

தி. மு. கழகம் தி. கழகத்திலிருந்து பிரிந்து, தனி அமைப்பாக இயங்கவேண்டிய இன்றியமையாத நிலை ஏன் ஏற்பட்டது எப்படி ஏற்பட்டது என்பதற்கான விளக்கங்களை முன்பே பலமுறை தெள்ளத் தெளிய விளக்கிக் காட்டியுள்ளோம்.

தி. மு. க. வும், தி. க.வும் ஒன்றாக இணைவதைத் தி. மு. க. வெறுக்கிறதா ? என்றால், இல்லை ! அல்லது மறுக்கிறதா ? என்றால், இல்லை ! இணைப்பு முயற்சியைத் தி. மு. க. ஆதரிக்கிறதா ? என்றால், ஆதரிக்கத் தயங்கவில்லை ! தி. மு. க. தானே முயற்சி எடுக்கிறதா ? என்றால், முயற்சி பலன் தராது என்று எண்ணுகிறது !

இறந்தவைகள் இறந்தவைகளாகவே இருக்கட்டும் இனி நடப்பவைகள் நல்லவைகளாக இருக்கட்டும், என்ற நல்ல எண்ணத்தை மேற்கொண்டு இரண்டு கழகங்களும் ஒன்றாக இணையக்கூடாதா ? என்று சிலர் கேட்கக் கூடும். இரண்டு கழகங்களும் ஒன்றாக இணையக்கூடாது என்பதல்ல, ஒன்றாக இணைய வழியில்லை—வழி ஏற்படாது இப்போது என்பதுதான் தி. மு. கழகத்தின் கருத்தாகும்.

நல்ல எண்ணங்கொண்ட நடுநிலையாளர்களின் முயற்சிக்குத் தி. மு. கழகம் கட்டுப்பட முன்வருமா ? வராதா ? என்று கேட்டால், தி. மு. கழகம் கட்டுப்பட ஒருப்படவே செய்யும் ; ஆனால் தி. கழகம் கட்டுப்பட ஒருப்படுமா என்பதுதான் கேள்வி.

கொள்கைகளைத் திட்டவட்டமாக வகுத்து, இயக்கத்தை மக்களாட்சிப் (சனநாயகம்) பண்பிற்கு ஏற்ப அமைத்து, அதற்கான சட்ட திட்டங்களை ஏற்படுத்தி, அந்தப்படிக்கே இரண்டு கழகங்களும் ஒன்றாக இயங்கவேண்டும் என்று நடுநிலையாளர்கள் ஒரு முறையைத் தீட்டிக்கொடுப்பார்களேயானால், அல்லது இரண்டு கழகங்களையும் கலந்துகொண்டு தீட்டுவார்களேயானால், அந்த முறையினின்றும் வழுவாமல் நடக்கத் திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்கள் என்றும் ஆயத்தமாகவே இருப்பார்கள் ; ஆனால் பெரியார் இராமசாமி அவர்களும் ஏனைய திராவிடக் கழகத் தோழர்களும் அதற்குக் கட்டுப்பட்டு நடக்க இணங்குவார்களா என்பதுதான் ஐயப்பாடு ! பெரியார் இராமசாமி அவர்களின் நாற்பது ஆண்டுகால அரசியல் வாழ்வையும், மக்களாட்சிப் பண்பிற்கு அவர் காட்டிய மதிப்பையும், அவரது மனப்போக்கையும் நன்கு நுணுகி ஆராய்ந்து அறிபவர்கள், பிறர் முடிவுக்கு, அது பிறர் எல்லோராலும் எவ்வளவுதான் ஒருமனதாகச் செய்த முடிவாக இருந்தபோதிலும், அதற்குக் கட்டுப்பட்டு நடக்கவேண்டும் என்ற எண்ணங் கொள்பவரல்லர் பெரியார், என்பதைத் தெளிவாக உணரவேசெய்வார்கள். தம்முடைய முடிவுக்குப் பிறர்கட்டுப்படவேண்டும், தம்முடைய முடிவைப் பிறர் கண்ணை மூடிக்கொண்டு அப்படியே பின்பற்றவேண்டும் என்று பெரியார் அவர்கள் எண்ணுவார்களே யொழிய. பிறருடைய முடிவுக்குக் கட்டுப்பட அவர் ஒரு நாளும் இசைந்ததில்லை ; இசையப்போவதுமில்லை. கமயூனிச்டுகளை ஆதரிக்கவேண்டும் என்பார் ; பிறகு திடீரென்று கம்யூனிச்டுகளை எதிர்க்கவேண்டும் என்பார் ! காங்கிரசை முழுக்க முழுக்க எதிர்க்கவேண்டுமென்பார் ; பிறகு திடீரென்று காங்கிரசை நிபந்தனை ஏதுமின்றி ஆதரிக்கவேண்டுமென்பார் ! ஆச்சாரியாரைத் தம் அருமை நண்பர் என்பார் ; பிறகு திடீரென்று ஆச்சாரியார் தமக்கு முழு எதிரி

என்பார்! ஆச்சாரியார் ஆட்சி அறவே கூடாது என்பார்; பிறகு ஆச்சாரியார் ஆட்சி தான் தொடர்ந்து இருக்கவேண்டும் என்பார்! காங்கிரசு ஆட்சி அடியோடு அகலவேண்டும் என்பார்; பிறகு காங்கிரசு ஆட்சிதான் இன்னும் இருபது ஆண்டுகளுக்கு இருக்கவேண்டும் என்பார்! எந்தப் பார்ப்பனனாய் இருந்தாலும் அவன் விரட்டியடிக்கப்படவேண்டியவன் தான் என்பார்; பிறகு ஆச்சாரியார், மாலூர் சர்மா போன்றவர்களோடு கூடிகுலாவி பேசி மகிழ்ந்திருப்பார்! பார்ப்பனர்கள் அத்தனைப் பேரும் குத்திக் கொலைசெய்யப்படவேண்டியவர்கள், அதற்காகத் திராவிடக் கழகத் தோழர்கள் ஒவ்வொருவரும் கத்தி ஏந்தியிருக்கவேண்டும் என்பார்; பிறகு தேர்தலில் நிற்கும் எந்தப் பார்ப்பனனாக இருந்தாலும், அவனை ஆதரிக்கும்படி கட்டளையிட்டால் தி. கழகத் தோழர்கள் அத்தனைப்பேரும் கண்ணை மூடிக்கொண்டு ஆதரிக்கத்தான் வேண்டும் என்பார்! போராட்டம் நடத்தினால் கல்லக்குடியில் பிணங்கள் விழுந்ததுபோலில்லாமல், ஒரு பிணங்கூட விழாமல், ஒருவருக்கு ஒரு குருதிக் காயம்கூட ஏற்படாமல் பார்த்துக் கொள்ளவேண்டும், தாம் நடத்தும் போராட்டம் அப்படித்தான் இருக்கும் என்பார்; பிறகு நாடகத் திருத்தச் சட்ட மசோதா நிறைவேறும்போது தாம் இங்கு இருந்திருந்தால் தாம் நடத்தும் போராட்டத்தில் சுமார் ஆறுபேராவது பிணங்களாக விழுந்திருப்பார்கள், பலர் குருதி சிந்தியிருப்பார்கள் என்பார்! இப்படிப்பட்ட போக்குகொண்ட பெரியார் இராமசாமி அவர்களோடு திராவிட முன்னேற்றக் கழகத்தார் எப்படி இணைந்து செல்ல முடியும் என்பதை இணைப்பு முயற்சியில் ஈடுபடுவோர் எண்ணிப்பார்க்க வேண்டும்.

திராவிட முன்னேற்றக் கழகத்திலிருந்த பெரும்பாலோர், பெரியார் இராமசாமியின் தலைமையின் கீழ் ஒருகாலத்தில் இணைந்திருக்கவில்லையா, என்றால், இணைந்திருக்கத்தான் செய்தனர்; உள்ள அமைதியோடு அல்ல, உள்ளக் குமுறலோடு. பெரியார் அவர்களின் வாழ்நாள் வரையிலுமாவது உள்ளக் குமுறலைத் தாங்கிக்கொள்ளலாம் என்ற துணிவோடு தான் அப்பொழுது பணியாற்றி வந்தனர். ஆனால் பெரியார் அவர்கள் "திருமணம் என்ற ஒரு ஏற்பாட்டி"ன் மூலம் உள்ளக் குமுறலை மிகவாக்கி அதனை வெடிக்கும்படிச் செய்துவிட்டார். அதன் காரணமாகத்தான் தி. மு. கழகம் தோன்றும்படியான இன்றியமையாத நிலை ஏற்பட்டது.

இயக்கக் கொள்கையிலே நீங்காப் பற்றும், இயக்க வளர்ச்சியிலே சலியா அக்கரையும் கொண்டு கூடும் உறுப்பினர்களின் பெரும்பான்மை எண்ணப்படிதான் இயக்கச் செயல்கள் ஆற்றப்படவேண்டும் என்ற மக்களாட்சிப் பண்பிற்கு, மிக்க மதிப்பளித்து நடக்கும் திராவிட முன்னேற்றக் கழகமும், தாம் சொல்லுவதை அப்படியே கண்ணை மூடிக்கொண்டு இயக்கத்தவர்கள் பின்பற்றவேண்டும் என்று கூறிடும் பெரியார் இராமசாமி அவர்களைத் தலைவராகக் கொண்ட திராவிடக் கழகமும் ஒன்றாக இணைய நாம் எவ்வளவுதான் ஆவல் பட்டாலும்—இயலுமா என்பதை இணைப்பு முயற்சியாளர்கள் கருதிப்பார்க்கவேண்டும். பிறர் வகுத்துத்தரும் எந்த ஒரு ஒழுங்கு முறைக்கும் பெரியார் அவர்கள் கட்டுப்பட்டு வரமாட்டார் என்பதிலிருந்தே, இணைப்பு முயற்சி பெரியார் காலம் வரையில் வீணான முயற்சி என்பதை எவரும் எளிதாக உணர்ந்துகொள்ளலாம். பெரியார் காலத்திற்குப் பிறகு (அவர் நீண்டகாலம் வாழ்வாராக!) எப்படியோ? காலம் விடைகூறும்!

❖ ❖ ❖

மதுரை நகரில் திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவராக இருந்தவர்களிலே சிலர், கழகத்தை விட்டுக் காங்கிரசிலே உறுப்பினர்களாகச் சேர்ந்துவிட்டார்களே, இது, கழகம் சரிய ஆரம்பித்துவிட்டது என்பதைக் காட்டவில்லையா?

மதுரை நகரில் சிலர் மேற்கொண்ட நடவடிக்கை, தி. மு. கழகம் வளர்ந்துவிட்டது என்பதைக் காட்டும் அறிகுறியே ஒழிய, கரைய ஆரம்பித்துவிட்டது என்பதைக் காட்டுவது ஆகாது.

ஒரு இயக்கத்தின் கொள்கைகளை ஏற்று, அந்த இயக்கத்தில் உறுப்பினராகி இருக்கும் ஒருவர், அந்த இயக்கத்தை விட்டு வெளியேறும்போது, விளம்பரப்படுத்திக்கொண்டு வெளியேறி, வேறு மாற்று இயக்கத்தில் சேருகிறார் என்றால், அதற்கு மூன்று நிலைமைகளில் ஒன்றோ அல்லது இரண்டோ முக்கிய காரணமாகப் பொதுவாக அமையும்.

(1) அவர் சேர்ந்திருக்கும் இயக்கத்தின் கொள்கைகளும் திட்டங்களும் சரியானவை அல்ல என்று அவர் உளமார உணர்ந்து மாற்று இயக்கம் ஒன்றின் கொள்கைகளும் திட்டங்களுமே ஏற்றவை என்று எண்ணுதல்.

(2) அவர் சேர்ந்திருக்கும் இயக்கத்தில் அவர் தாறுமாருகவும், தவருகவும், கட்டுப் பாட்டுக்குப் புறம்பாகவும் நடந்துகொண்டு, அதன் காரணமாக இயக்கம் அவரைத் தள்ளி வைக்கவோ அல்லது வெளியேற்றிவைக் கவோ முயலும்போது, இயக்கத்தில் இனி தமக்கு இடமிருக்காது என்று எண்ணி, மாற்று இயக்கத்திடம் போக்கிடம் தேடிப் புறப்படுதல்.

(3) அவர், தாம் சேர்ந்திருக்கும் இயக்கத் தில் தமக்குச் செல்வாக்கோ, பெருமையோ, புகழோ, பதவியோ, பொறுப்போ, வசதியோ போதுமான அளவு கிடைக்கவில்லை என்று கருதி, அந்தப் போதுமான தேவைகளை மாற்று இயக்கம் ஒன்று நிறைவேற்றித்தரும் என்று எண்ணி, சுயநலத்தின் காரணமாக இயக்கத்தை விட்டு இயக்கத்துக்கு வெளி யேறுதல்.

மதுரையில் தி. மு. கழகத்தை விட்டுக் காங் கிரசுக்கு சென்றவர்கள் இரண்டாவது மூன் ாவது க்ரரணங்களுக்காகத்தான் வெளியேறி இருக்கிருர்களே யொழிய முதற் காரணத்துக் காக அல்ல என்பதை அவர்களது எழுத்தும் சொல்லுமே தெள்ளத் தெளிவாக்குகின்றன.

உண்மையைக் கூறவேண்டுமானல் அவர் கள் அனைவரும் வெளியேற்றப்பட்டவர்களே யொழிய, வெளியேறினவர்களல்லர். அவர்க ளுடைய நடவடிக்கைகள் இயக்கத்துக்குக் களங்கம் கற்பிப்பனவாகவும், தாறுமாருன போக்குக் கொண்டனவாகவும் இருந்த கார ணத்தால், மதுரை நகரத் தி. மு. கழகக் கிளை அவர்களை ஒதுக்கிவைத்தும் வெளியேற்றி வைத்தும் தீர்மானங்களை நிறைவேற்றிற்று. தி. மு. கழகத்தில் இனி தங்களுக்கு இட மில்லை என்று கண்டுகொண்ட அவர்கள் காங்கிரசில் போக்கிடம் பார்த்துக்கொண்ட னர். இப்படிப்பட்ட கறைகள் இயக்கத்தி லிருந்து மறைவது தி. மு. கழகத்திற்கு வளர்ச்சிதரும் நிகழ்ச்சியே ஒழிய சரிவைத் தரும் நிகழ்ச்சியாகாது.

தி. மு. கழகத்திலிருந்து விலக்கப்பட்டவர் களைக் காங்கிரசு 'பிரமுகர்'களாக வரவேற்று ஏற்றுக்கொண்டிருக்கிறது. இத்தனை நாளும் காங்கிரசின் கண்களுக்குச் 'சில்லரை'யாகப் பட்டவர்கள், இப்பொழுது 'பிரமுகர்'களாகப் படுகிருர்கள் என்ருல், காங்கிரசு எவ்வளவு 'பஞ்சைப் பண்பு' கொண்டிருக்கிறது என்ப தைத் தெளிந்துகொள்ளலாம். இங்கிருந்து ஓடிஓடியோடிய 'இவர்களுக்கே' இவ்வளவு வர வேற்பு—'பிரமுகர்' என்ற பட்டம் என்ருல், தி. மு. கழகத்தைச் சார்ந்த முன்னணி வீரர் களிலே ஒருவர் சென்றுவிட்டால் என்ன கொண்டாட்டம் கொண்டாடுமோ, தெரிய வில்லை!

அகில இந்தியக் காங்கிரசுக்குத் தலைமையேற்று நடாத்திய எச். சீனிவாச அய்யங்காரும், சுபாசுசந்திரபோசும், கிருபளா னியும் கொள்கை காரணமாகவே விலகிச் சென்றதுபோன்ற பட்டியலை அடுக்கடுக்காய் வைத்திருக்கிற காங்கிரசுக்காரர்கள், தி. மு. கழகத்திலிருந்து தள்ளப்பட்டவர்கள் தங்க ளிடம் வந்து சேர்ந்துவிட்டதற்காகக் 'கும்மா ளம்' போடுகிருர்கள்.

இப்பொழுது 'ஓடியவர்கள்'தான் மதுரை தி. மு. கழகத்திற்குத் தூண்களாக நின்றவர் கள் போலவும், இவர்கள் போய்விட்டபிறகு கழக மாளிகை அப்படியே சரிந்து விழுந்து விட்டதுபோலவும் எண்ணிக்கொண்டு, மற்ற வர்களும் அப்படியே எண்ணவேண்டும் என்று கருதி, காங்கிரசு ஏடுகள், அப்படிக்குச் செய்தி களை வெளியிட்டுவருகின்றன. இந்த 'ஓடிய வர்கள்' ஒத்துழைப்பு ஒரு சிறிதும் இல்லாம லேயே மதுரை மாவட்ட மாநாடு பூரிப்பும் பெருமையும், சீரும் சிறப்பும் தரும் வகையில் நடந்தேறியிருக்கிறது. இவர்கள் இருக்கும் வரையில் மாநாடு சிறப்பாக நடைபெறுவதற் கான வழி ஏற்படவில்லை; அவ்வளவு இடை யூறு பயப்பவர்களாக இருந்தார்கள். இவர்கள் ஒதுக்கப்பட்டார்கள்; பிறகுதான் மாநாடு வெற்றிகரமாக நடந்தேறியது.

இந்த 'ஓடியவர்கள்', கழகத்தை வளரவிட் டுக், காங்கிரசைச் சரியவைக்கச் சென்றுள்ள 'கெடுவது காட்டுங் குறிகள்' என்று உணர்க!

✤ ✤ ✤

" ஒருவரின் பல்வேறு பருவங்களில் எடுக்கப் பட்ட நிழற்படங்கள், பல்வேறு தோற்றமுள்ளன வாகக் காட்சியளிப்பதைப் போன்றுதான், கடவுள் பல்வேறு சமயங்களில் செயலாற்றத் தோன்றிய தோற்றங்கள் பல்வேறு உருவங்களாகக் காட்சி யளிக்கின்றன " என்று கூறும் கூற்று பொருத்த முடையதாகுமா?

மேற் சொல்லப்பட்ட கூற்றினைப் பசும்பொன் தோழர் முத்துராமலிங்கர் அவர்கள் ஆங்காங்கு கூறிவருகிறாராம். பல்வேறு கடவுள்களையும் நிலைநாட்டுவதற்குத், தோழர் முத்துராமலிங்கர், மிகமிக அக்கரை எடுத்துக் கொண்டு, பல்வேறு கடவுள்களின் உண்மைக்கு அமைதிகாண அரும்பாடுபடுகிறார் என்று அறிகிறோம். அவரது முயற்சி கண்டு நாம் இரங்கவேண்டியவர்களாகத்தான் இருக்கிறோம்.

அப்போதைக் கப்போது அருஞ்செயலாற்ற கடவுள் தோற்றமெடுக்கிறார் என்பதே பொருத்தமற்ற ஒரு கூற்றாகும். ஏனென்றால், வைதீகர்களின் வழக்கமான கூற்றுக்களான "அவனன்றி ஓரணுவும் அசையாது", "அவன் தூணிலும் இருப்பான் துரும்பிலும் இருப்பான்" என்ற கருத்துக்களுக்குக் 'கடவுள் தோற்றமெடுக்கிறார்" என்ற கருத்து முரண்பட்ட ஒன்றாகும். அண்டத்தில் காணப்படும் அனைத்துமே 'அவர்' தோற்றங்களாகக் காணப்படும்போது, சிலதான் அவரது தோற்றங்கள், பிறவெல்லாம் அவரது தோற்றங்கள் அல்ல என்று கூறுவது வைதீகர்களின் கருத்துப்படிக்கே பொருந்திவரவில்லையே!

உலகில் காணப்படும் எல்லாக் கடவுள்களும் ஒரே கடவுளின் தோற்றங்கள்தாம் என்பதைத், தோழர் முத்துராமலிங்கர் அவர்கள் கூறுகிறாரே யொழிய, வைதீகர்களின் கருத்துக்களுக்கு ஆதாரமாக உள்ள வேதபுராண இதிகாச சாத்திர சம்பிரதாய ஆகமங்கள் கூறவில்லை. எல்லாக் கடவுள்களும் தனித்தனி ஆற்றல் படைத்தனவாகவும், ஒன்றை யொன்று சிறிய செல்வாக்கும் புகழும் பெற்றனவாகவும், ஒன்றோடொன்று நட்பு—உறவு—பகைமை கொண்டனவாகவும் இருக்கின் னவே யல்லாமல், ஒரு மனிதனுக்கு அவ வாழ்நாளில் அமையும் பல்வேறு நிழற் பட களைப்போல இருப்பதில்லையே. மனிதனி ஒரு பருவத்துக்கும் மற்றொரு பருவத்துக்கு சண்டையோ—சச்சரவோ—போட்டியோ ஒ சமயத்தில் ஏற்பட்டு, யாருடைய செல்வாக்கை நிலைநாட்டுவது என்ற கேள்வி எழாதே ஆனால் வைதீகர்கள் சொல்லிவைத்திருக்கு கடவுளர்களுக்குள் எல்லாவித சண்டையு சச்சரவுகளும் ஏற்படுகின்றனவே! எனவே ஒரு மனிதனின் பல்வேறு பருவ நிழற்பட களைப்; பல்வேறு கடவுள்களுக்கு உவமையா குவது எப்படிப பொருந்தும்!

மனிதனுக்குப் பல்வேறு பருவத்தோற்ற கள் அமைவது இயற்கையினால் ஆகும் ஆனால் நாம் பார்க்கும் பல்வேறு கடவுள்களு குத் தோற்றங்கள் அமைந்திருப்பது இயற்கை யினாலல்ல, மனிதனின் கற்பனையினாலாகு நாம் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் பரு மாற்றங்கள் ஏற்பட்டேதீரும்; நாம் விரும் னால் 'கடவுளுக்கு' ஒரு தோற்றம்கூட இல்ல மல் செய்துவிடலாம்!

இப்பொழுது இருக்கும் கடவுள்களெல்லா மனிதனுக்குத் தேவையற்ற கற்பனை உருவ சிலைகள் என்று சொல்லி தள்ளிவைக்க மு படாமல், அவற்றிற்குச் சப்பைக்கட்டு கட் தோழர் முத்துராமலிங்கர் அவர்கள் முனை திருப்பது வருந்தத்தக்கதேயாகும்.

மனிதனின் பல்வேறு பருவ நிழற்படங்க இப்பொழுது இருக்கும் கடவுள்கள் எல்லே ரையும் நிலைநாட்டுவதற்கான ஏற்ற உவமை யாகாது—உவமையாக்கும் கூற்று அறிவுக்கு பொருந்திவராது என்க!

●●

இராமாயணம்—ஆரிய திராவிடப் போர்

இராமாயண காலத்திற்கு முன்னரே தமிழர் பிரபலமடைந்திருந்தனர். ஆரியருக்கும் இந்தியாவிலும் இலங்கையிலும் வாழ்ந்துவந்த ஆரியரல்லாத ஒருசார் மக்களுக்கும் நடந்த போரைச் சிறப்பித்துக் கூறுவதே இராமாயணமாகும். இப்போரில் ஆரியர் வெற்றியடைந்தது பிரசித்தம். அவர்கள் தங்கள் வெற்றிப் பிரதாபத்தைப் பலவாறு புனைந்துரைத்தனர். தங்கள் பகைவரை அரக்கர் என்று எழுதிவைத்தனர். அவர்கள் பெயர்களைத் தம் நூல்களில் புகுத்துங் கால் தம்மொழிக்குத் தக்கவாறு மொழிபெயர்த்துக்கொண்டனர். நடந்த விஷயங்கள் நூல்களில் புகுங்காலத்து பாரித்துத் தூலித்துப்போயின. உரல் விரலான சந்தர்ப்பங்களும் இல்லாமற் போகவில்லை.

—'நவசக்தி' இதழ் 1929—30.

தையற் கலை

கே. பி. சுந்தரம், G.C.T.

நிக்கர்

இவ்வுடை கால்சட்டைக்கு உள்ளும், வேட் க்கு உள்ளும அணியப்படுவதாகும். இவ் டைக்கு உள் துணி (தையல்வேன்) வைக் ம் முறையை விளக்கிப் படம் வரையப்பட் ள்ளது. இதற்கு முன்பக்கம் உள்ள திறப்பை ப்பன்) 5, 6 எண்கள் வரையோ, அல்லது 7 எண்கள்வரையோ அணிபவரின் விருப் ப்படி அமைக்கலாம்.

அளவுகள்

ளம்	18	அங்குலம்
இடுப்புச் சுற்றளவு	30	,,
ட்டம் சுற்றளவு	36	,,
ாட்டம்) முன்னங்கால் லூஸ்	28	,,
மல அளவு (ஸ்கேல்)	18	,,



1-ல் இருந்து 0 வரை 18 அங். (முழுநீளம்)

2-ல் இருந்து 0 வரை 12 அங்.
(1/3 புட்டம் சுற்றளவு)

3-ல் இருந்து 2 வரை $10\frac{1}{2}$,,
($\frac{1}{4}$ இடுப்புச் சுற்றளவு + 3 அங்.)

4-ல் இருந்து 3 வரை 3 ,,
(1/6 ஸ்கேல் அளவு)

A-ல் இருந்து 4 வரை $1\frac{1}{2}$ அங்.
(A, 12-க்கு இணைப்பு)

5-ல் இருந்து 3 வரை $1\frac{1}{2}$ அங்.

6-ல் இருந்து 3 வரை 6 அங்.
(1/3 ஸ்கேல் அளவு)

7-ல் இருந்து 0 வரை $10\frac{1}{2}$ அங்.
(3. 2-க்கும் உள்ள அளவு)

8-ல் இருந்து 1 வரை $13\frac{1}{2}$,,

9-ல் இருந்து 4 வரை $1\frac{1}{2}$,,

10-ல் இருந்து 9 வரை $\frac{1}{2}$,,

11-ல் இருந்து 4 வரை $1\frac{1}{2}$,,

12-ல் இருந்து 0 வரை 9 ,,
($\frac{1}{4}$ இடுப்புச் சுற்றளவு+$1\frac{1}{2}$ அங்.)

13-ல் இருந்து 12 வரை $1\frac{1}{2}$,,

14-ல் இருந்து 2 வரை 3 ,,
(1/6 ஸ்கேல் அளவு)

B-ல் இருந்து K வரை 11 ,,
($\frac{1}{4}$ புட்டம் சுற்றளவு+2 அங்.)

8, 4, 5, 6, 7, 0 வரை முன்பக்க இணைப்புகள்.

11, 10, K, 12, 0 வரை பின்பக்க இணைப்புகள்.

முன்னங்கால் பட்டி மடிப்புக்கும், பின்பக்க வளைவு மடிப்புக்கும், அடிக்கால் மடிப்புக்கும், இடுப்புப்பட்டி நாடா நுழைக்கும் பட்டிமடிப்புக்கும், படத்தில் சாய்வுக் கோடுகள் வரைந்துள்ளதைக் கண்டு விளக்கம் பெறுக.

மக்கட்பெருக்கம் என்ற தலைப்பில் 4-வது கட்டுரை இவ்விதழில் வெளியிட இயலவில்லை, அடுத்த இதழில் இடம்பெறும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

—ஆசிரியர்.

Regd. No. M 6290

MANRAM

தமிழ் நாட்டில் தலை சிறந்த

வெண்சங்கு சீயக்காய்தூள்

எங்கும் கிடைக்கும்

எங்களிடம் தயாராகும் மணத்தில் சிறந்த

செல்வம்—ராணி ஊதுபத்திகளை

வாங்கி உபயோகியுங்கள்

தயாரிப்பாளர்: வெண்சங்கு சீயக்காய்தூள் தொழிற்சாலை

3037-38, டபீர் குளம் ரோடு, தஞ்சாவூர்.

மன்றம்

மலர்-2

1953-54

24 இதழ்கள்கொண்டது

அழகிய முறையில் பைண்ட் செய்யப்பட்ட

வால்யூம் விலை ரூ. 8-0-0

மலர் 2-ல் முதல் இதழ் தவிர மற்ற 23 இதழ்களும் பைண்ட் செய்யப்படாமல் அனுப்ப ரூ. 6-0-0 அனுப்பவேண்டும்.

தனி இதழ் வேண்டுவோர் (1-5-53 தவிர) இதழ் ஒன்றுக்கு 5 அணா வீதம் தபால்தலைகள் அனுப்புதல் வேண்டும்.

நிர்வாகி, மன்றம்,

26, நைனியப்பன் தெரு, மண்ணடி,

சென்னை-1.

நம் நாடு

[தி. மு. க. வின் ஒரே நாள் இதழ்]

ஆசிரியர்: அறிஞர் அண்ணாதுரை

தி. மு. க. கிளைகளும், தி. மு. க. தோழர்களும் "நம்நாடு" வாங்குவதைத் தமது கடமைகளில் முக்கியமானதாகவும் முதன்மையானதாகவும் கருதுவார்களாக!

"நம் நாடு" வளர்ச்சியே கழக வளர்ச்சி என்பதைக் கழகத் தோழர்கள் உணர்வார்களாக!

இன்றே "நம் நாடு"விற்குச் சந்தாதாரராகச் சேருங்கள்!

ஆண்டுக் கட்டணம்	ரூ.	24—0—0
ஆறு திங்கள் ,,	ரூ.	12—0—0
தனி இதழ்	ரூ.	0—1—0

நிர்வாகி, "நம் நாடு",

'அறிவகம்'

இராயபுரம் :: சென்னை-13.

Edited, Printed and Published by V. R. NEDUNCHEZHIYAN M.A.,
at MANRAM ACHAKAM at 26, Nainiappan St, Mannadi, MADRAS-1